# திறவுகோல்

**2054 | ஆடி**

**மாத இதழ்**



**வெளியீடு:**

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கி - பட்டினப்பாலைக் காட்டும் தமிழரின் அறஞ்சார்ந்த வாழ்வியல்



*திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். கடந்த இரு மாதங்களாக திறவுகோலில் எழுத முடியாமல் போனது. மன்னிக்கவும். எடுத்துக்கொண்ட பட்டினப்பாலை தொடர் கட்டுரையை முடிக்க முடியாமல் போனதும் வருத்தமளிக்கிறது. 301 அடிகள் கொண்ட தமிழரின் தொன்மையான, அறஞ்சார்ந்த, அறிவான வாழ்வியலை படம் பிடித்துக்காட்டும் பட்டினப்பாலை பற்றிய கட்டுரைத் தொடரில் கடந்த கட்டுரை வரை 260 அடிகளை ஆராய்ந்தோம், அறிந்தோம். முந்தைய கட்டுரைகளை வாசிக்க திறவுகோல் இணையதளத்தை பார்வையிடவும்.*

*கரிகாலன் வென்றொழித்த பகைவர்களின் நிலப்பரப்புகளில் நிலையை கடைசிக் கட்டுரையில் பார்த்தோம்.கரிகாலச்சோழன் போரில் பகைவரை வென்றபின் பகைவரது நிலம், மக்களது நிலை, போருக்கு முந்தைய நிலையோடு ஒப்பிட்டு கீழ்க்கண்ட வரிகள் காட்டுகிறது.*

*கொடுங் கால் மாடத்து நெடுங் கடைத் துவன்றி,*
*விருந்து உண்டு ஆனாப் பெருஞ் சோற்று அட்டில்,*
*ஒண் சுவர் நல் இல் உயர் திணை இருந்து,*
*பைங் கிளி மிழற்றும் பால் ஆர் செழு நகர்,*
*தொடுதோல் அடியர் துடி படக் குழீஇ, 265*

*கொடு வில் எயினர் கொள்ளை உண்ட*
*உணவு இல் வறுங் கூட்டு உள்ளகத்து இருந்து,*
*வளை வாய்க் கூகை நன் பகல் குழறவும்;*
*அருங் கடி வரைப்பின் ஊர் கவின் அழிய (269)*

*கரிகாலன் வெற்றிக்கு முன் எந்நேரமும் விருந்தூட்டிய வீடுகள், கிளி மிழற்றும் காப்பிடங்கள், வளைவுக்கால் முகப்புகள் அமைக்கப்பட்ட மாடி வீடுகள் மற்றும் அதன் சோற்றுச் சமையல் மணக்கும் அட்டில் சுவர்,விருந்தூட்டிய பின் மிஞ்சிக் கிடக்கும் சோற்றை வளைவு வாயிலில் வைத்துக்கொண்டு வழங்கக் காத்திருந்த நல்ல இல்லங்களின் உயர்திணைப் பண்பு,அவ்விடங்களில் வளர்ப்புப் பச்சைக் கிளிகள் விருந்தினரை அழைக்கும்*

மழலைமொழி, மழலை மொழிக்குக் கைம்மாறாகப் பால் ஆர்த்தும் பாவையர் நிலை என செழிப்பாக விளங்கியது பகைவரின் கொற்றம்.

இங்கு புலவர் பாட்டுடைத் தலைவன் கரிகாலன் பெருமை கூறினாலும் பகைவர் நில உயர்வையும் கூறுவதில் அக்காலத்தில் வரலாற்று நூலாசிரியர்கள், ஊடகம் போல போல விளங்கிய புலவர்கள் எத்தகைய நடுநிலையோடும் அறத்தோடும் வாழ்ந்தனர் என்பதனை விளங்கி கொள்ளமுடிகிறது.

இவ்வாறாக கரிகாலன் வெற்றிக்குப் பின் அந்த இடங்களில் பாலைநிலத்து எயினர்களின் நடமாட்டம் (பாலை நிலத்து மக்கள். இவர்களது தொழில் கொள்ளையிடுதலும், வழிப்பறிச் செய்தலும். இயற்கை வளம் குன்றிய இடமாதலால், பாலை நிலத்து மக்களின் தொழில் - கொள்ளையிடுதல்), மற்றும் செருப்பை வெளியில் கழற்றிவிட்டு அன்று நுழைந்த இல்லங்களில் இன்று அவர்கள் செருப்புக் காலோடு நடமாடுகின்றனர் என்றும், அன்று கிளி மழலை கேட்ட இடங்களில் இன்று கூகையின் குழறல் ஒலி பகலிலேயே கேட்கிறது, உடுக்கடிக்கும் துடிப்பறை கேட்கிறது என்றும் , அன்று விருந்தூட்டிய இடங்களில் இன்று கொள்ளையடித்த உணவைப் பங்கிட்டுக் கொள்கிறார்கள் என்றும், அன்று காவலரின் காப்பகம், இன்று மேவலரின் (வேண்டாதவர்களின்) விளையாட்டிடம் என்றும் புலவர் கூறுவதிலிருந்து போர் எத்தகைய கொடியது, நிலத்தை, மக்களை, குணத்தை, குலத்தை எவ்வாறு வேரறுக்கும் என்பதனையும் விளங்கி கொள்ள முடிகிறது.

இந்த இடத்தில் அண்மையில் சர்ச்சைக்குரிய விடயமாக பேசப்படும் காலணி (செருப்பு) பற்றிய ஒரு விடயத்தையும் உள்வாங்க வேண்டும். சோழன் கரிகாலன் வெற்றி கொண்டது பகைவன் பாண்டியனை. பாண்டிய நாட்டு மக்கள் காலணி (செருப்பு) அணிந்திருந்தது இங்கு புலனாகிறது. தமிழர்களுக்கு காலணி (செருப்பு) அணிய கற்றுக்கொடுத்ததாக யாரும் உரிமை கோரத்தேவையில்லை. சங்ககால மக்களே காலணி (செருப்பு) அணியும் அளவிற்கு நாகரீகம் அடைந்த மக்கள் தான் என்பது ஆணித்தரமான உண்மை .

இன்று வரை போருக்கு பின்னான நிலத்தின் நிலை இவ்வாறாகத்தான் உள்ளது. அண்மையில் நடந்த, நடைபெற்று வரும் உக்ரேனியன் போரில் கூட இக்காட்சிகள் காணக்கிடைக்கிறது. போர் ஒரு கொடுமை. போர் ஓர் பேரழிவு. போாரை திட்டமிட்டு தொடங்க மட்டுமே முடியும். தொடங்கிய போர் கட்டுப்பாடுகளுக்கும் முடிவுக்கும் வருவதற்க்கு மிகப்பெரிய விலையிட முடியாத உயிரிகளை பலிகேட்கும்.ஆம் பகைவரின் ஊரானது அழியுமாறு பெரும் நாசத்தினைச் செய்தும் அத்தோடு சினம் அடங்காது, பகைவரின் குலம் முழுவதும் அழித்தவன்; மலையைப் பெயர்த்து எடுப்பான்; கடலை நீரின்றி தூர்த்து விடுவான்; வானத்தை வீழ்த்துவான்; காற்றின் திசையை மாற்றுவான் என உலகோர் புகழ்ந்து கூறும்படி, தான் செய்து முடிக்க வேண்டும் என்று நினைத்த செயல்களைச் செய்து முடிக்க கூடியவன் என்ற பெயரை வரலாற்றில் பொறிக்க கரிகாலன் (கரிகாலன் மட்டுமல்ல அத்தனை அரசர்களின் அவாவும் அதுவாகத்தான் இன்று வரை

*இருக்கிறது) நினைத்ததை உருத்திரங்கன்னார் பின்வரும் அடிகளில் கூறுகிறார்.*

*பெரும்பாழ் செய்தும் அமையான் மருங்கு அற*
*மலை அகழ்க்குவனே கடல்தூர்க் குவனே*
*வான் வீழ்க்குவனே வளிமாற்றுவன் எனத்*
*தான் முன்னியதுறை போகலின் (270- 273)*

*கரிகாலனின் வெற்றி வேட்கை மேலும் மேலும் இவ்வாறு ஓங்குகிறது. சங்க காலத்தில் மூவேந்தரின் ஆட்சியின் கீழ் இருந்த சேர, சோழ, பாண்டிய நாடுகள் மட்டுமல்லாமல் கொங்கு நாடு, தொண்டை நாடு, அருவாள் நாடு முதலான குறு நாடுகளும் தன்னாட்சி பெற்றிருந்தன. அந்நாட்டு மக்கள் இனங்கள் அந்நாட்டின் பெயரால் குறிக்கப்பட்டனர்.*

*ஒளியர் ஒளிநாட்டுச் சங்க கால மக்கள். ஒளி நாட்டார் பணிந்து ஒடுங்க செய்தான் திருமாவளவன்.*

*அருவாளர் அருவாணாட்டுச் சங்க கால மக்கள்,பட்டினப்பாலை என்னும் நூலின் பாட்டுடைத் தலைவன் திருமாவளவன் ஒளியரை ஒடுக்கியது கண்டு அஞ்சி அருவாளர் மன்னர் பலர் பணிந்து கரிகாலனுக்கு எடுபிடி வேலைகள் செய்துவந்தனர்.*

*சங்ககாலச் சேரநாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது குடநாடு. அதில் வாழ்ந்த மக்கள் குடவர் எனப்பட்டனர்.*

*'குடபுலம்' என்பது சேரநாடு.குடதிசை என்பது மேற்குத் திசையைக் குறிக்கும் தமிழ்ச்சொல். சேர நாட்டைக் 'குடபுலம்' என்பர். கரிகாலனின் வெற்றிகளைக் கண்டு குடவர்-மக்கள் சோர்ந்து கூம்பிப்போயினராம்.*

*இவ்வாறாக ஆத்திரம் அடைந்து பகை மன்னர்களின் கோட்டைகளைக் கைப்பற்றவும், பாண்டிய மன்னனின் வலிமை கெடவும், செருக்கினையும் வலிமையையும் உடைய முயற்சி, பெரிய தானை, மறமுடைய வலிமை உடைமையால், சினத்தால் சிவந்த கண்களால் நோக்கி, புல்லிய முல்லை நிலத்தின் மன்னர்களின் வழிமுறை கெடவும், இருங்கோவேள் என்ற மன்னனின் சுற்றத்தார் கெடவும் கரிகாலன் திருமாவளவன்வெற்றி வாகை சூடினான் என்கிறது பட்டினப்பாலையின் பின்வரும் அடிகள்,*

*பல் ஒளியர் பணியு ஒழுங்க,*
*தொல் அருவாளர் தொழில் கேட்ப, 275*

*வடவர் வாட, குடவர் கூம்ப,*

*தென்னவன் திறல் கெட, சீறி, மன்னர்*
*மன் எயில் கதுவும் மதனுடை நோன் தாள்,*
*மாத் தானை மற மொய்ம்பின்,*
*செங் கண்ணால் செயிர்த்து நோக்கி, 280*

*புன் பொதுவர் வழி பொன்ற,*
*இருங்கோ வேள் மருங்கு சாய,282*

*புகழ் , பெருமைக்காக தான் அரசர்கள் போர் புரிகிறார்கள் என்ற ஒரு எண்ணம் இங்கு இயல்பாக தோன்றுகிறது. ஆனால் போருக்கு பின்னான கரிகாலன் செயல்கள் தமிழரின் அறஞ்சார்ந்த வாழ்வியலை நமக்கு காட்டுகிறது.*

*வெற்றிகொண்ட இடத்தை மக்கள் வாழத்தகாத  நிலமாக மாற்றியது அறமற்ற அறிவியல் வளர்ச்சிகொண்ட நவீன அரசுகள். நிரோஷிமா நாகசாகி, பாலத்தீன நிலங்கள் இதற்கு சாட்சி. ஆனால் நமது மூதாதையர்கள் அவ்வாறு அல்ல. வெற்றி கொண்ட நிலத்தை கரிகாலன் எவ்வாறு செப்பனிட்டான் என்பதனையும் அவனது செங்கோன்மையையும் பின்வரும் அடிகள் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.*

*காடு கொன்று நாடாக்கிக்*
*குளம் தொட்டு வளம் பெருக்கிப்*
*பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கிக் (285)*

*கோயிலொடு குடிநிறீஇ,*
*வாயிலொடு புழையமைத்து,*
*ஞாயில் தொறும் புதை நிறீஇப்*
*பொருவேம் எனப் பெயர் கொடுத்து,*
*ஒருவேம் எனப் புறக்கொடாது, (290)*

*காட்டை அழித்து நாடாக்கி, குளங்களைத் தோண்டி, வளமையைப் பெருக்கி, பெரிய மாடங்களை உடைய உறையூர் நகரை விரிவுபடுத்தி, அரண்மனைகளுடன் குடிகளை நிறுவி, அரண்களில் பெரியதாகவும் சிறியதாகவும் வாயில்கள் அமைத்து, கோட்டையின் ஏவல் அறைதோறும் அம்புக் கூட்டை நிறுவி, நாட்டு மக்களைக் இயல்பினன் கரிகாலன். வீரத் திருமகள் நிலைத்த பெரிய நிலையான அவனது மதில் மின்னலைப் போன்று ஒளி வீசுகிறது என்பது பாடலின் அடிகள் கூறும் பொருள்.*

*எப்போதும் நாட்டு மக்களின் நலனுக்காக "போர் செய்வேன் நான்" என்று சூள் உரைத்து, "விட்டு அகலமாட்டேன்" என்று கூறி, புறமுதுகு இடாது இருந்தான் கரிகாலன் என்பது*

பாடலின் இறுதி அடிகள் கூறும் பொருள்

கரிகாலன் காட்டை அழித்து குளம் கட்டி விளைநிலங்களைப் பெருக்கினான் என்கிறார். இவர் காலம் கி.மு. 2ம் நூற்றாண்டு. இவன் வழி வந்தவரே கல்லணையைக் கட்டியவன் முதல் கரிகாலனின் பேரனான இரண்டாம் கரிகாலன் ஆவான் என்கிறது வரலாறு.


காவிரியின் வெண்ணாற்றங்கரையில் இருந்த வெண்ணிப் பரந்தலை எனுமிடத்தில் தனது பங்காளிகளுடன் போரிட்டு வென்று அதிகாரத்திற்கு வந்தவன் கரிகாலன். கல்லணையின் நீளம் 1080 அடி. அகலம் 40 முதல் 60 அடி. பாம்பு போல நெளிவுகளுடன் கட்டப்பட்டுள்ளது. நீரின் வேகத்தில் அணை உடைந்துவிடக்கூடாது என்பதற்காக அமைக்கப்பட்ட நுட்பமான ஏற்பாடு. கல்லணையைக் கட்டியவன் கரிகால் பெருவளத்தான் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏராளமாய் இருக்கிறது.

இன்னும் 11 அடிகள் மட்டுமே உள்ளது. அடுத்த இதழில் சந்திக்கலாம். இதுவரை நேரம் ஒதுக்கி வாசித்த அனைத்து திறவுகோல் வாசக அன்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

—

இளவரசி இளங்கோவன்,
மொன்றியல் கனடா.

**செல்வி. ஹர்ஷா ரகுபதி,**
**பெண்ணாடம்.**



# பயணம்

*இன்னும் நிறைவேறாத மகனின்*
*வேலை வாய்ப்புக் கனவு,*
*அடைத்து முடிக்காத*
*வீட்டின் கடன்கள்,*
*அடகு வைத்து திருப்ப முடியாத*
*மகளின் நகைகள்,*
*இன்னும் எழுந்து*
*நடமாட முடியாமலிருக்கும்*
*மனைவி,*

*இதையெல்லாம் விட்டு விட்டு,*
*நேற்று வந்த நெஞ்சு வலியால்*
*இறந்து போனவரின்*
*இறுதி யாத்திரை*
*அமரர் ஊர்தி*
*படிக் கட்டில்*
*எழுதியிருந்தது*
*இறைவனைத் தேடி இறுதி பயனம்*
*என்று,*

*மேற்கண்ட வரியில் வரும் பயணம்*
*வெறும் எழுத்துப் பிழை தான்*
*ஒன்றும் தவறில்லை,*
*அந்த சரியான "பயணமே"*
*ஒரு தவறு தானே?*

—

*இரா. மதிராஜ்,*
*3/78, அலப்பட்சக் கவுண்டன் புதூர்.*

---

# பறக்கும் சிறகினைக் காப்போம்

*முட்டையிட்டு குஞ்சுகளை பாதுகாக்கும்*
*பட்சிகளுக்கு கூடு ஒன்று தானே பலம்...*

*ஒய்வெடுக்க ஒய்யாரமாய் பின்னப்பட்ட*
*உசத்தியான படுக்கையே கூடு...*

*பறவையின் ஜனனங்கள் அரங்கேறும்*
*மகத்தான சன்னதியே  கூடு...*

*தாயின் அரவணைப்பை பறைசாற்றும்*
*பாடநூலே கூடு...*

*மரத்தில் கூடுகள் நிறைந்து வனம் சிறந்தது*
*அன்று...*

*வனம் அழிந்து பறக்கும் இனங்கள்*
*ஒழிகிறதே இன்று...*

*பறக்கும் சிறகுகளை பறிக்கும் நிலையில்*
*நாம் அல்லவா?*

*பட்சிகள் அழிவால் நம் சந்ததி*
*தொலையும் என்பதே உண்மை*
*இல்லையா?*

—

*வாழ்வியல் கவி,*
*(சா. நாகூர் பிச்சை),*
*திண்டுக்கல்.*



# வெறுமையாய் கிடக்கிறது எனது தெருக்கள்

ஒன்றாய் கூடி ஓடியாடி அம்மாவின்
தொள்களில் பல கதைகள் கற்றோம்.

சொந்தங்கள் கூடி புன்னகைத்த நாட்கள்
எங்கே போனது.

தெருவெங்கும் கூட்டமாக விளையாடிய
சிறுவர்கள் எங்கே போனது.

வெறுமையாய் கிடக்கிறது எனது
தெருக்கள்.

தெருவிளக்கில் படித்த நியாபகங்கள்
நெஞ்சில் இன்னும் பாரமாய் கண்களில்
ஈரமாய்.

பிழைப்புக்காக ஊரைவிட்டு சென்ற
சொந்தங்கள் எத்தனை எத்தனை நம்
மண்ணில்.

பள்ளிகூட பாடம் முடிக்காமல்
அம்மாவிடம் அடிவாங்கிய நினைவுகள்
மறக்குமா?

# இன்னும் சில தினங்களில் மழை ...

வீட்டின் முன் கரைந்து கொண்டிருந்த
காகத்திற்கு
கொஞ்சம் உணவு வைத்தேன்
இன்னும் சில தினங்களில் மழை
என்பதை உணர்ந்த காகம்
உணவை விடுத்து
சில குச்சிகளை
மட்டும் எடுத்து கொண்டு
கிளைக்கு திரும்பியது...

மரத்தில் புதிதாக
கூட்டை கட்டிகொண்டிருந்த காகம்
கூ(வீ)ட்டின் அவசியத்தை
உணர்த்தி சென்றது ...

எளிதில் கிடைத்து விட்டது
காகத்திற்கு
சுள்ளியும் இலவம்பஞ்சும்...

ஏதும் கிடைக்காமல் பிழைக்கும்
ஏழை என்ன செய்வான் இனி....!!

—

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# குழந்தைகளிடமிருந்து கற்போம்

குழந்தையை விட
மிகவும் பெரியதாய்
கரடி பொம்மை
- ரமீஸ் பிலாலியின் குறுங்கவிதை.

நிஜங்களை விட
நிழல்களின் மேல்
எவ்வளவு அன்பு
இந்த குழந்தைகளுக்கு.
குழந்தைகள் நிஜங்களாக இருக்கிறார்கள்.
அவர்களின் முன் நிழல்கள்
பேசாதிருந்தாலும் எவ்வளவு
உரையாடுகின்றன.

ஒரு தாயைப் போல்
ஒரு தந்தையைப் போல்
ஒரு சகோதரனைப் போல்
ஒரு சகோதரியைப் போல்
முதல் நட்பைப் போல்
குழந்தைகளிடம் பழகுபவை நிழல்களே.

கரடியை நேரில் கண்டால் தெரிவித்து ஓடுகிறார்கள் மனிதர்கள். ஊருக்குள் கரடி வந்துவிட்டதாம், வெளியே நடமாட வேண்டாம் என வீட்டிலியே பதுங்கியிருக்கும் இவர்கள் மத்தியில், இந்த கரடி பொம்மைகளோடு குழந்தைகளின் உரையாடல்களும், நட்பும் உறவும் அலாதியானது.

ஊருக்குள் கரடி வந்ததால், உறங்காத மனிதர்கள் மத்தியில், கரடி



பொம்மையை
கட்டிப்பிடித்து
உறங்குகின்றனர்
குழந்தைகள்.

யானையின் காதைப்
பிடித்து திருகுவதும்,
தும்பிக்கையைப் பிடித்து ஆட்டி
மகிழ்வதும் குழந்தைகள்
பொம்மைகளிடத்தில் தான்.

எல்லோரும் நிஜங்களை எதிர்பார்க்க,
குழந்தைகள் தாங்கள் எப்போதும்
நிஜங்களாக இருந்து, நிழல்களை
இரசித்து வாழ்கிறார்கள்.

ஒவ்வொரு குழந்தையும் புத்தனாகவே வாழ்கிறார்கள். புத்தனைப் போல், அவர்களின் இதழ்களில் எப்போதும் தவழ்கிறது புன்னகை.
புத்தனைப் போல் அவர்கள் மாட மாளிகைகளை விரும்புவதில்லை. வளர்ந்த மனிதன் தான் ஆசைப் படுகிறான். மாட மாளிகைகளை விரும்புகிறான். பதவிக்கும் பணத்திற்கும் அலைகிறான். குழந்தைகளின் ஆசைகள் என்பது வேறு. அவர்கள் மகிழ்ச்சியாக வாழ ஆசைப்படுகிறார்கள். மனதுக்குள் பொறாமையும் எந்த கெட்ட குணங்களும் குடி கொள்வதில்லை.

ஒரு பட்டாம்பூச்சியைப் போல் வாழ்கிறார்கள். அவர்களுக்குள் உள்ள ஆசைகள் எல்லாம் பேராசைகள் அல்ல. இயற்கையோடும், மகிழ்ச்சியோடும் வாழ்வதற்கான ஆசைகளே.
ஆசையே துன்பத்திற்கு காரணம் என்ற

புத்தரின் வரியில் சொல்வப்படுபவை வளர்ந்த மனிதர்களின் நெஞ்சில் எழும் பேராசைகளே.

ஒரு ஜென்னைப் போல் குழந்தைகள் வாழும் வாழ்வை இந்த மனிதர்களின் சுயநலம் தான் திசையைத் திருப்புகிறது.

எப்போது தனக்கான உறைவிடத்தை அமைத்துக் கொள்ள மனிதன் நினைத்தானோ அப்போதோ அவனுக்குள் சுயநலம் மிகுந்து இயற்கையை அழிக்க ஆரம்பித்தான். மலைகளை, ஆறுகளை, கடல்களைக் கூட மனிதன் விட்டு வைக்கவில்லை. இவையாவும் அனைத்து உயிர்களுக்குமானது. குழந்தைகள் இவைகளை இரசிக்கிறார்கள். இவைகளோடு வாழ்கிறார்கள்.

மழையை, காற்றை இரசித்து, சக குழந்தைகளோடு பேதங்களின்றி பழகும் குழந்தைகள் போல் மனிதர்கள் நாம் மாற வேண்டும்.

சாதி, மதம், மொழி, இனம் என்று எந்த பாகுபாடும் பார்ப்பதில்லை குழந்தைகள். பின்னாளில் சமூகம் தான் இவற்றையெல்லாம் கற்றுக் கொ(கெ)டுக்கிறது. அவர்கள் குழந்தைகளாகவே இருந்தால், இந்த உலகம் எவ்வளவு அழகாக இருக்கும்.

குழந்தைகளுக்கு எதுவும் தெரியாது என்று சொல்வதை விட்டு விட்டு, அவர்களை உற்று நோக்க வேண்டும். அவர்களின் குணாதிசயங்களை நாமும் வாழ்வில் பின்பற்ற வேண்டும். குழந்தைகள் கற்பது இருக்கட்டும். குழந்தைகளிடமிருந்து கற்க வேண்டும் வளர்ந்த மனிதர்கள்.

—

*சா. கா. பாரதி ராஜா,*
*38-3, கைலாசநாதர் கோயில் தெரு,*
*பெரிய நத்தம், செங்கல்பட்டு. 603002*
*கைப்பேசி: 9944315732*



**தெ. ஜெயப்ரியன்,**
**ஏழாம் வகுப்பு,**
**ஐவேலி,**
**விழுப்புரம் மாவட்டம்.**

## அவளுக்கென பறித்து வந்த ரோஜாவில்

உதிர்ந்த இதழொன்று
எனக்கு முன்னால் போகிறது
அவளிடம்
காதலைச் சொல்லி
மகிழ்ந்திட...!
/

மரமான கணம் முதல்
என்னில் அடைக்கலம்
எண்ணற்ற பறவைகள்.
/

நகரும் படகின் துடுப்படிகளை
மறுப்பின்றி ஏற்கிறது
நதி.
/

நொடிக்கொரு தரம்
இமைக்கும் கணங்களில்
அவசர முத்தம்
கொடுத்துக் கொள்கிறது
இமைகள்.
/

என் கவிதைகள்
ஒவ்வொன்றும் சிறு கீறலின்றி
பிரசவிக்கிறது என்னை.
/

விழிகளின்
இரவும் பகலும்
இமைகள்.
/

என்னை விட என்மீது
அதிகம் பற்றுள்ளவை
எனது கவிதைகள்.
/

அவளின் வாசனைக்கு
நான் வைத்த பெயர்
காதல்.
/

வார்த்தைச் சிறகுகள்
விரித்து
கற்பனையால் ஆகாயத்தை
அளக்கத் தெரியாதவனை
கவிஞனென அங்கிகரிப்பதில்லை
பறவைகள் உலகம்.
/

கொடுத்ததற்கெல்லாம் வட்டியும்
முதலுமாய்ப் பெறுகிறது.
மரங்களிருக்கும் மண்.
/

மொத்தமாய் வாங்கி
குறைந்த லாபத்திற்கு
விற்றதில்
கைமேல் நிறையபலன்.
/

வயது முதிர்ந்த தாய்
என் கரம் பற்றி நடக்க;
நடைபழகும் பிள்ளையின்
கரம் பற்றும் நான்.
/

இந்த இரவுக்கென்று
தீர்மானித்து வாங்கப்படுவதில்லை

மெழுகுவர்த்திகள்.
/

படங்களுக்கு
வண்ணங்கள் தீட்டி
மகிழ்ந்த புத்தகத்தை;
மூடிவைத்ததும்
அழுகிறாள் மகள்.
உயிர்ப்பெற்ற
விலங்குகளுக்கு
மூச்சுத் திணறுமென்று.
/

எனது சட்டைப் பையில்
பணம் ஏதுமற்ற நிலையில்
யாசகம் கேட்டு வருபவர்க்கெல்லாம்
இல்லையென்றுச் சொல்லாமல்
சின்னச் சிரிப்பில்
இரண்டினை மகிழ்வாய்
கொடுத்தனுப்புகிறாள் மகள்.
/

நேற்றைய இரவின்
நிலவையும்
நட்சத்திரங்களையும்
நானும் என் மகளுமாய்
இருவர் மட்டுமே
ஆளுக்குச் சரிபாதியாய்ப்
பங்கிட்டுக் கொண்டோம்.

--

பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம்.
பேச: 9443139353



---

# பலத்த காற்றில்,
அமைதியாக உறங்கியது,
இரவு பொழுதோடு வானம்.

## கல் எறிந்தவனுக்கு ,
பசியாற்றியது,
விழுந்த மாங்காய்.

## சுதந்திரமாக நீந்துகின்றன,
கடல் மீன்கள்,
எல்லைக் கோடுல்லை.

## பக்கத்து தோட்டம்,
விழுந்து விட்டது,
மரத்தின் நிழல்.

## கல்லை பார்த்தவுடன்,
திடீரென பிரிந்து சென்றுவிட்டது,
கிளை தார்ச்சாலை.

—

அ. செல்வராஜ்,
உடுமலைப்பேட்டை,
2/172. கண்ணமநாயக்கனூர்.
உடுமலைப்பேட்டை தாலுகா.

# வாழ்க்கை இப்படியே போய்டுமா ஐயா!

வந்து சேர நினைத்த இடம்வேரோ
பாதை மாறிய தென் பயணமோ
இந்த ஓடாத வாழ்க்கை தோணி
நின்ற இடத்தில் ஆடாமல் ஆடுகிறதே
சொப்பனங்களாய் அல்ல இலட்சிய
கனவுகளாய்

அப்போது கண்டக்காட்சிகள் கனவாய்
கலைகின்றதே

பள்ளிப்பருவத்தில் நீர்வீழ்ச்சிபோல்
வளமாக தோன்றியது

வெள்ளி வயதில் கானல்நீராக இல்லாமல்
லாகிறதே

வாழ்க்கை நீளத்தின் மத்தியில் இருக்கும்
உணர்வு

நினைத்தவழி செல்லாமல் கிடைத்தவழி
செல்லும் சோர்வு

ஓடும் வாழ்கையில் நமக்காக சாதித்தோம்
என்ற நிறைவுபெற ஓடும் மானிடரிலே
ஓடுபொறியில் ஓடிவதுபோல மைல்
தாண்டாத நிலை

இந்த தருணத்தில் ஏற்படும் கேள்வி
வாழ்க்கை இப்படியே போய்டுவிடுமா!
ஆனால்

எந்த நிலைக்கும் ஏற்ற பதில்

வாழ்க்கைத்தோணி சற்று ஓடாது
போனாலும்

துடுப்பு கையிலும் துடிப்பு மனதிலிருக்க
வெற்றி என்றும் நமதே!

—

இரா. ரம்யபாரதி,
புதுச்சேரி.



S. ஹரிதா,
4ஆம் வகுப்பு,
ஸ்ரீ பாரதி வித்யாலயா பள்ளி,
மன்னார்குடி.

# ஆசையில் ஓர் காதல்

இரு கைகளுக்குள்
அகப்பட்டு போனது
அவள் முகம் மட்டுமல்ல...
அவனின் இதயத்தில்
சிறைபட்டு போன
அவள் உயிரும் தான்.......!

யுத்தம் செய்கிறார்கள்
சத்தமில்லாமல்
காதலின்
போர்களத்தில்....!
நாவிதழ் முத்தத்தால்!

இந்த கோடை வெயிலிலும்
குளிர் காற்று...
இருவர் பரிமாறும் மூச்சுக் காற்று...!

நாணற் புல்லும்
நாணத்துடன்
நாணப்பட்டது
இந்த தீண்டலில்....!

தாகம் கொண்ட அவன்
இதயத்தில் விழுந்த
ஒற்றை மழைத்துளி
அவள் உதட்டு ஈரம்...!

இடைவெளி இன்றி
இறுகக் கட்டிக்கொள்ள
வழி தேடி அலைந்து
திரிகிறது காற்று.....!
கொஞ்சம் விலகி விடுதலை
செய்யலாமே!...

- பொன்மணி தர்மராஜன், *BE.,*
பரவாக்கோட்டை.



---

# தமிழிசை சந்தமடி நீ எனக்கு

பாரதியின் பாட்டாவேன் நான்
உனக்கு
குயிலிசை நீ எனக்கு
மயிற்றோகையாவேன் நான்உனக்கு

கானமழை நீ எனக்கு
கவிதை மழை நான் உனக்கு
செம்பூவின் இதழடி நீ எனக்கு
தேனருந்தும் வண்டாவேன் நான் உனக்கு

தாயின்மடி நேசமடி நீ எனக்கு
சேயழும் தாலாட்டாய் நான் உனக்கு
செம்மொழியின் தமிழாவாய் நீ எனக்கு
பிழையின்றி எழும் பாட்டாவேன் நான்
உனக்கு

கண்ணீரை ஈர்க்கும் காற்றாவேன் நான்
உனக்கு
மேவும் கடலலையாய் எழுவாய் நீ
எனக்கு

கொலுசாவேன் நான் உனக்கு
கொலுசுகுலுங்கும் ஓசையாவாய் நீ
எனக்கு
கொஞ்சும் மழலை நான் உனக்கு
பிஞ்சுவிரலாய் கோதிடுவாய் நீ எனக்கு

தெள்ளுதமிழ் நீ எனக்கு
பள்ளி ஆசான் நான் உனக்கு
மழையாவாய் நீ எனக்கு
மரமாவேன் நான் உனக்கு

நகரும் முட்களாய் நீ எனக்கு
நாளும் பொழுதும் நான்உனக்கு
நிலவின் கதையாய் நான் உனக்கு...
நிலவின் ஒளி நீ எனக்கு

காலமெல்லாம் பேசுவேன் நான் உனக்கு
கவிதையின் வரிகளாய்
படர்ந்திடுவாய் நீ எனக்கு

கவியெழுதும் வரிகள் நீ எனக்கு
எழுதியெழுதி படித்திடுவேன் நான்
உனக்கு
கவிஞராய் நான் உனக்கு
வாழ்த்துமழையாய் நீ எனக்கு.

## பூவே....! பூவே ....!

நிறம் மாறா பூவாய்
மதம் பற்றி எரியாத பூவாய்
மணங்களை அள்ளிவீசும்
மனதோடு இணைந்த பூவே

கற்குடமாய் தேன்சுமந்து
பொற்குடமாய் ஒளிரும் பைம்பூவே
காற்றோடு சிணுங்கியபோதும்
சோலையைமலர்வித்த போதும்
சேலைகள் விரும்பிய காதல்பூவே

முகமொன்றில்
பனித்துளியாட
அலையென மோதும்
கடலாய் நீள் பரப்பில்
காதல் கொண்டாயோ?

புன்னகைத்து உனை சூடும்
பாவையர்கள் முகம் சுழித்து
விட்டெறிகிறார்கள் நீ
முகம் வாடிய பொழுதில்...

மந்திர பூஜையில்
இந்திரனாய் அர்ச்சிக்கப்படுகிறாய்...
மனங்களை இணைக்க
உனையல்லவா கட்டி
இழுக்கிறார்கள் மாலையாக..

மணங்களை வீசும் நீ
இரவில் கள் இறக்கும்
போதையாய் மாறுகிறாய்
மனங்களை இணைக்க...

மங்கலங்களை சூடவே
மலர்களை சூடுகிறார்கள்
மங்கையர்கள் விரும்பும்
மணம் கொண்ட உன்னை...

நாட்கள் நகர்ந்தாலும்
உன் சுவாசங்களை
நுகர்ந்தே நகர்கிறார்கள்
நீ வாழும் தேசத்தில்
நேசங்களாய்....

பூக்களும் பேசுகின்றன

விலை பேசிவிட்டு
வாங்காமல் செல்லாதே
பூக்கடைகளும் பூக்கட்டுமே
பூவாய் பேசும் மெல்லிய பூவே

## சொற்சுவையின் பொருள்கூட்டி

நற்சுவையென பண்கூட்டி
பொற்குடமாய் வழிந்தோட
தேனினிய பாங்காய்
மலையென பெரு ஓங்காய்
மண்மணக்க பேசிடுவாய்

ஆடிடுவாய் பாடிடுவாய்
ஆளுயர வளர்ந்திடுவாய்
மீசையென முறுக்கியெழ
ஆசையுடன் வார்த்திடுவாய்
பூசைதனில் கொட்டிடுவாய்

இடிந்தெழும் மின்னலாய்
பாவையரின் சன்னலாய்
உத்தமரின் அண்ணலாய்
சத்தியத்தின் முன்னதாய்
பாரினில் பண்ணாய்
கண்முன்னே நின்றாய்

தேற்றிடுவாய் மனதோரம்
கூட்டிடுவாய் இதழோரம்
இரகசியமாய் காதோரம்
பேசிடுவாய் தினந்தோறும்

உளியழும் கற்சிலையாய்
கவியெழுதும் பொற்சிலையாய்
தேம்பியழும் மழலையாய்
வணங்கிடும் அணங்காய்
விளங்கிடுவாய் உயிர்மூச்சாய்

நற்றமிழை பயின்றிடவே
நாவினிலே நடை புகுத்திடுவாய்
கொற்றவையின் தாள் மீது
பணிந்திட்டு நின்றிடுவாய்

பேச்சினில் உயிராவாய்
பாட்டினில் அழகாவாய்
பயின்றெழ நடையாவாய்
நீயே நற்றமிழாவாய்

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# பசி

வறியோர்கள் எந்நாளும் விரும்பாத உணர்வு!
வறுமையாலே என்றென்றும் வாழ்வே நோவு!
வளமுள்ளோர் நாடும் விருந்தோடே உண(ர்)வு!
வட்டிலிலே இருந்தும் உண்ணவியலா நோன்பு!

--

கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

# இயற்கை

கொசுவை ஒழிக்க
அடித்த மருந்தின் வாசம்
தட்டான்கள் காணாமல் போனது

தொலைபேசி பயன்பாட்டை
மாற்ற நினைத்து
அலைபேசி வந்ததன் விளைவு
அலைபேசி கோபுரங்களால்
சிட்டுக்குருவி காணாமல் போனது

குளிர்சாதனக் கருவிகள்
பயன்பாட்டு விளைவு
தூய்மையான காற்று மாசானது
குளிர்மேகங்கள் உருவாவது நின்றது
ஓசோன் ஓட்டையானது

அளவுக்கு மீறிய
நிலத்தடிநீர் உறிஞ்சலால்
புவி வெப்பமானது
தூயக்குடி நீருக்கு பஞ்சமானது

பாரம்பரிய உணவுகளை
பரிகாசம் செய்து
அன்னிய உணவுகளால்
பலவித நோய்களை பெற்றோம்

உடல் உழைப்பை மறந்தோம்
பிணிகளுக்கு இடம் கொடுத்தோம்
மருந்து வணிகம் உயர
நம்மையே விலைக் கொடுத்தோம்

இன்னும்
எவையெல்லாம் காணாமல் போகுமோ
எவையெல்லாம் பாதிப்புக்கு
உள்ளாகுமோ
எவையெல்லாம் இழக்கப்
போகிறோமோ
என்ன என்ன நோய்கள்
எட்டிப் பார்க்குமோ
என்ன என்ன மருந்துகளால்
நம்மை பலிகடாவாக்க போகிறோமோ
தீர்மானிக்கட்டும் இயற்கை
தீர்க்கட்டும் செயற்கையை
புதிய உலகம் பரிணமிக்கட்டும்
இயற்கையை நேசிக்கும்
மனிதர்களோடு....

--

செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.



**S. நிகிதா,**
4ஆம் வகுப்பு,
ஸ்ரீ பாரதி வித்யாலயா பள்ளி,
மன்னார்குடி.

# அப்புறம்...

ஒரு பணியில் இருக்கையில்
அடுத்த பணிக்கான
அழைப்பில்
அப்புறம்

வயிற்றுக்கு தேவைப்படா
நிலையில்
உணவுக்கான அழைப்பில்
அப்புறம்

மீண்டும் மீண்டுமான
யோசிப்புக்குப்பின்னும்
தெளிவு இல்லாநிலையில்
அப்புறம்

முடிவுக்கான
உதட்டு மொழி
எதிர்பார்ப்பின் போது
அப்புறம்

ஒற்றையா
இரட்டையாவுக்கு
ஆலோசனை கேட்கப்படுகையில்
அப்புறம்

செய்தி சொல்ல ஆரம்பிக்கையில்
மூன்றாம் மனிதர்
வருகையால்
அப்புறம்

அப்பப்பா
ஒற்றை வார்த்தைக்கு
எத்தனை அர்த்தங்கள்
அந்த கணத்தைப்பொறுத்து...

## அதனால்

யோசிப்பு
அதனால்
எண்ணங்கள்
அதனால்
கால நிர்ணயத்தோடு
இலக்குகள்
அதனால்
திட்டமிடல்
அதனால்
செயலாக்கம்
அதனால்
முடிவுகள்
அதனால்
வெற்றியானால்
அடுத்த இலக்கு
தோல்வியானால்
காரணம் அறிந்து
மீண்டும் முயற்சி
இது தான்
முழு வட்டம்

## நமக்குள்ளே

நம்பிக்கை கொடுக்கவோ
மிகையான அபிப்பிராயம் கொண்டோ
காரியம் ஆக வேண்டும் என்றோ
பிறர் கொடுக்கும்

நம் தகுதிக்கு மீறிய
பாராட்டிலும்
முடிவு தூண்டிலிலும்

உள் மன விசாரணை
பலம்
பலவீனம்
அறிந்து
மனசாட்சியின்
துணை கொண்டு
முடிவுகள் எடுப்போம்

பிறகு என்ன
வெற்றி தான்

## இதே வேலையாய் போச்சு

கவனம் கொடுத்து
சிரத்தை எடுத்து
கால வரையறைக்குள்
கஷ்டம் இருந்தாலும்
இந்த பணியை முடி
அப்புறம்
இவ்வளவு நெருக்கடிகள்
இருக்காது
என மனதின்
நம்பிக்கை வார்த்தைகள்
புத்திக்கு

ஆனால் அது
முடிந்த பின்
அடுத்து அடுத்து
அதே நெருக்கடியோடு
ஆணைகள்
மனதிடமிருந்து

இதே வேலையாய்
போச்சு மனசுக்கு
ஓய்வே கொடுக்காமல்
என புலம்பல்
புத்தியிடமிருந்து...

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.
தொலைப்பேசி: 9994920236



## ஒரு முறை விபத்து நடந்தால்

அடுத்த முறை ரயிலில்
போகக்கூடாதென
யோசிக்கும் மனிதர்களுக்கு,
குடிப்பது மட்டும் விதிவிலக்கு,
கண்முன்னே எத்தனை மனிதர்கள் இறந்தாலும்
தொடர்ந்து கொண்டேயிருக்கிறார்கள்...
மதுக்கடையை நோக்கி தங்கள் பயணத்தை!

—

*அ. பர்கானா*

# தன்முனைக் கவிதை

கண்ணாம்பூச்சி விளையாடும்
குடிசைவீட்டுக் குழந்தைகள்
விளையாட வரலாமா? என்கிறது
சாளரத்தின் வழியே நிலா

மதம் பிடித்த யானை
தெளிந்து கொண்டது
மனிதர்களே நீங்கள்
தெளிவது எப்பொழுது?

எங்கள் வீட்டு புகைப்படத்தில்
சாகித்திய விருதாளர் தாத்தா
முதல் கவிதை படை(டி)க்கிறேன்
எனக்கு நெற்றியில் முத்தம்..!
தன்முனைக் கவிதை

தொண்ணூற்று ஒன்பது
மலர்களை தேடிப் பறித்தேன்
நூறாவது மலருக்கு
என் காதலை சொல்லவே!

குறிஞ்சிப்பாட்டு கபிலரே!
உங்கள் மீது கோபமே
நூறாவது மலராய் ஆருயிரை
சேர்க்கவில்லை என்பதாலே

## ஜென் கதை

பல வெற்றிகளைக் கண்ட பிரபல விளையாட்டு வீரர் ஒருவர் சிறப்பாக பயிற்சி மேற்கொண்டு சர்வதேசப் போட்டியில் தனது பயிற்சியாளருடன் கலந்து கொள்ள புறப்பட்டுச் சென்றார். பிறந்த மண்ணிற்கும், தாய் நாட்டிற்கும் வெற்றிக் கோப்பையோடு வந்து பெருமை சேர்க்க வேண்டும் என்று பேராவலோடு விளையாடத் தொடங்கினார். ஆனால் முதல் சுற்று போட்டியிலே தோற்றுப் போனார்.

அவர் தொடர்வண்டியில் மிகுந்த மனக்கவலையோடு சொந்தம் ஊருக்கு திரும்பிக் கொண்டு இருந்தார்.

எதிரில் அமர்ந்து இருந்த துறவி ஒருவர் 'நீ ஏன் சோகமாக இருக்கிறாய்' என்று கேட்டதும் அவர் நடந்ததை எல்லாம் விளக்கமாகச் சொன்னார். அதற்கு அந்தத் துறவியோ சிரித்துக் கொண்டே இதற்கு தான் நீ இவ்வளவு வருந்துகிறாயா? என்று கேட்டார். உடனே வீரன் 'நீங்களும் இதே போல் தோற்று இருந்தால் துளி அளவும் வருத்தம் இல்லாமல் இப்படி தான் சிரித்துக் கொண்டு இருப்பீர்களா' என்று கோபத்தோடு கேட்டார்.

ஆம் என்று சொன்னார் துறவி.ஏற்கனவே முடிந்து போன ஒன்றிற்கு நான் கவலைபட்டு என்ன நடக்கப்போகிறது என்றார். அதற்குள் துறவி இறங்க வேண்டிய ரயில்நிலையமும் வந்து விட்டது.

"ஒவ்வொரு மரத்திற்கும்
இலையுதிர் காலமும் உண்டு
வசந்தகாலமும் உண்டு
அதே மௌனத்தில் மரம்"

என்று அவருடன் படிக்கட்டு வரை

சென்ற வீரனிடம் சொன்னார்.

'நீயும் மரமாய் இரு' என்று சொல்லி
அவரின் மனக்கவலையை இறக்கி
வைத்து தொடர்வண்டியில் இருந்து
இறங்கினார் பெயர் சொல்ல மறுத்த
துறவி.

—

ஸ்ரீவி. முத்துவேல், சென்னை.



---

# உன்னை உணர...

தன்னைச் சீரமைத்து தன்னைத் தான்
உணர
எண்ணத்தில் உதிக்கின்ற ஏற்றமிகு
சிந்தைகளை
மனதில் தேக்கிவைத்து மகிழ்வுடன்
பின்பற்ற
வாழ்வின் பாதைகளில் வசந்தங்கள்
பொழிந்திடுமே.

முன்வைத்தும் பேசுகின்ற உலகத்தில்
பின்நின்றும் காலை வாரும் தன்மை
கண்டு
உன்னை நீ உணர்ந்தபடி
உலகத்தை மனதில் படி.
செவியில் விழுகின்ற சொற்களெல்லாம்
வழியமைக்கக் கிடைத்திட்ட கற்களென
சேமித்துக் கொண்டால்
இதயத்தில் சலனமில்லை
எப்போதும் கவலையில்லை.

வாழ்த்தும் வசவும் வழங்கிடத்தான்
வாய்த்திருக்கும் சுற்றத்திடம்
வாழ்ந்து காட்டுதலே பாடமாகட்டும்.
----

கழுத்தில் கத்தி
அமைதியில் இருக்கிறேன்
சலூன் கடை
----

பிதுங்கி நிற்கும் குப்பைத்தொட்டி
வழிந்தோடுகிறது வாய்க்கால்
நெகிழிப் பைகளை சுமந்தபடி
----

ஏறி இறங்குகிறது
அணிலின் விளையாட்டு
மின்கம்பத்தில் பசுங்கொடி
----

அசையும் காற்றில்
ஆடாமல் காக்கிறது கம்பம்
கொடியில் கிளி
----

கழுத்தில் எறும்பு
அசையாமல் நிற்கிறேன்
ஓவியம் வரையும் மகள்
----

எல்லா அழகு நிலையங்களையும்
வேடிக்கை பார்க்க வேண்டி
நகரத்தில் கால் வைக்கிறாள்
கிராமத்து தேவதை.

கண்குளிர ரசித்த மனம்
நின்று பேச விரும்பாத
மனிதர்களைக் கண்டதும்
தஞ்சமடைகிறது வேலி ஓர மரங்களிலும்
தெரு நிறைக்கும் விளம்பரங்களிலும்.

### ஒரு ஒரு சிறு கல் தேடி

பயணம் போகும் நதியின் தேடலில்
மலையின் தடயங்கள்
மாட்டிக் கொள்கின்றன.
மூலிகைகளும் மேகப்புன்னகையும்
நதியில் மூழ்கிக் கிடக்க
மணல் குன்றுகளை மேடுகளாக்கி
பாறைகளின் மீது ஊர்வலம் நடத்தி
வடிவங்களை படைக்கும்
நதியின் பயணத்தில்
நில்லாது நகரும் கல்லின் மீது
நீந்துகின்றன மீன்களும்
மீன்களின் கண்களும்.

கரையில் ஒளிரும் புல்லின் மேனியில்
கால் கடுத்து நிற்கும் கொக்கின் அலகில்
கூழாங்கல் மாட்ட
நீரின் பிம்பத்தில் மிதக்கும் இறக்கையில்
எதிரொலிக்கும் சூரியனிடம்
தன்னை ஒப்படைத்து
ஓய்வெடுக்கும் நதியின் கனவில்
மின்னுகின்றன கற்கள்.

### இடைவிடாத அறிவிப்பில்

ஒலிபெருக்கிகள் இரைய
கேட்டும் கேட்காமலும்
கடக்கும் தொடரிகளின்
பேரிரைச்சலைத் தாண்டி
படிகளில் நகரும் மனிதர்களுக்குள்
ஓடிக்கொண்டே இருக்கிறது
அவரவர் நேரத்தை அறிவிக்கும்
எச்சரிக்கை ஒலி.

### கனவுகளற்றவனின் விழிகளுக்குள் ஒளிந்து

கிடக்கும் கயிறுகளை,
காதுகளற்றவனின் மூளைக்குள்
தேங்கிக் கிடக்கும் பிளிறல்களை,
வாழ்வின் போக்கிடம் இழந்து
வடிக்கும் ஓதத்தை,
கண் மூடி தியானித்து
காண்போருக்கு ஆசி வழங்கும்
ஆலய முகப்பில் நீளும் கையை
யாசிக்க நீட்டியபடி நகரும்
கரும்பாறையின் தொலைவனத்தை
தேடுவது யார் கனவு?

### அதிகாலைத் தருணங்களில்

பறவைகளின் வருகை
மாடிப்படிகளை உயிர்ப்பிக்கின்றன
அலகில் சிறகுலர்த்தியும்
குரலில் உலகெழுப்பியும்
விழிகளில் இரை நிரப்பியும்
கால்களில் நம்பிக்கை பரப்பியும்
குஞ்சுகளின் நடை பயணத்தை
கொஞ்சிக் குலாவியும்
நாளை எதிர்கொள்ளும் வான்வெளியை
என்னுள் விதைத்திடும் அழகை
கடவுளின் பரிசென தரிசிக்கிறேன்.

—

**இளையவன் சிவா,**
மடத்துக்குளம்.



# இயற்கை

மஞ்சள் நிற வெண்கதிர்கள்
விழித்தெழும் கண்களை ஈர்த்திடும்!
பசுமை சூழ்ந்த வயல்வெளியில்
வாடைக்காற்றில் சற்று நெல்மணிகளும்
அசைந்தாடும்!
லேசான தூறல்கள் தூறும்
சிதறிய இடம்காணும் கண்களுக்கு
அது திகட்டாத தேனாக தெரியும்!
இயற்கை அரசியின் மர்மஜாலம்!
மழையின் வாசம் மூக்கினுள் நுழையும்!
முழுநிலவில் அன்று நான்
என் முகம் பார்க்கையில்
காற்றே வெட்கம் கொண்டு
வெட்டும் மின்னலை போல
என்னுள் வந்து செல்லும்!
இரவில்தான் இயற்கையை ரசிக்க
கொஞ்சம் இடைவெளி கிடைக்கிறது...
அந்த அழகான நேரம்
நீ என் கனவில்
நான் உந்தன் நினைவில் இயற்கையே!

—

க. பூமணி,
எண்: 2/34, ஏரிக்கரை தெரு,
துண்டலம், அண்ணா நகர்,
அருகில் நும்பல்,
சென்னை - 600077.

---

# பெண்ணியம்

மாதவம் பெற்று கிடைத்த பெண்மை பல
வெறி நாய்களுக்கு இறையாகும்
அவலம்...

பள்ளி சென்ற கால்களில் பிடிவாதமாய்
திணிக்கப்பட்ட மிஞ்சியின் இறுக்கம்
அவள் விரல்களில் மட்டுமல்ல
இதயத்திலும் தான்...

கடிகார முள்ளாய் தேங்காமல்
உழைத்தாலும்
மாதத்தின் மூன்று நாள் கொடுமையிலும்
உழைக்கும் வேதனை...

கானல் நீராய் அவள் கனவுகள் பல
அடுப்படி கரியில் கவிதையாய்
எழுதப்பட்டிருக்க கைரேகை பதிந்த
சன்னல் கம்பிகளுக்கு மட்டுமே தெரியும்
அவள் தவிப்பும் வலியும்...

வம்பாய் வரதட்சனை கொடுத்தும்
தெம்பாய் உலவ முடிவதில்லை புகுந்த
வீட்டில்...

தினம் உண்டும் உண்ணாத நிலை தான்
எஞ்சிய பருக்கையை நின்ற மேனி
விழுங்கும் வரம் பெற்றவளாயிற்றே

எத்தனை வளர்ச்சி
எத்தனை மாற்றம்
இன்னும் சுழலவில்லை அவள் வாழ்க்கை
சக்கரம் மட்டும்...

புதுமை செய்ய பிறந்த அவளுக்கு
கிடைக்க பெற்ற விதவை மலடி
வாழாவெட்டி பட்டங்கள் ஒரு

பக்கமிருக்க
தந்தை கணவன் பிள்ளைகளின்
அடக்குமுறையிலே சிக்கி தொலைந்த
அவள் சுதந்திரம் மறுபக்கம்

பெண் (PEN) என்ற பெயர்
கொண்டதால் தான் போலும்
மை தீர்ந்த உடனே வீசியெறியப்படுகிறது
பேனா

தன் நிழலால் பலரை வாழ வைத்து
நிஜத்தை தொலைத்துவிட்ட

அவள் வாழ்க்கை ஒளிர தேவை ஓர்
விடியல்! நிரந்தர விடியல்!

*பெண்மை ஓர் காவியம்.,
போற்றுவோம்..
பெண் விடுதலைக்காக போராடுவோம்..*

--

இவள்,

கவி (பார்கவி. செ)

---

# அவளோர்.... அற்புதம்.

பெண் பேரண்டப் பெருவிடியல்
பேரன்புப் பெரும் புதையல்.
கண்ணிமைக்குள் கவலையடக்கும்
வித்தைகள் தெரிந்தவள்.

தன்னுறக்கம் தொலைத்தாலும்
பிள்ளை உறங்க விழிப்பவள்.
அன்பையே ஆகாரமாக்கி
அனுதினமும் தருபவள்.

காலையிலே கண்விழித்து
கடமைகளை முடிப்பவள்.
வேலையிலே அலுப்பு இன்றி
விருப்போடு செய்பவள்.

ஆலையிலே கரும்பு போல
துன்பம் எல்லாம் பொறுப்பவள்.
சோலையிலே நறுமலராய்
இன்பத்தை விதைப்பவள்.

பிள்ளைகளுக்காய் தன் வாழ்க்கை
முழுதாகத் தொலைப்பவள்.
வெள்ளைச் சிரிப்போடு
அனைவரையும் அணைப்பவள்.

முல்லை போல் தன் குடும்பம்
மணந்திடவே நினைப்பவள்.
இல்லத்தின் இன்பங்களுக்கு
அடிநாதமாய் இருப்பவள்.

—

மக்கொனையூராள்.

# நடைப்பயிற்சி நட்சத்திரங்கள்

அதுவாகவே நடக்கிறது என்று
நினைக்கத் தோன்றும்
நடைப்பயிற்சி அது

இரவுக்கும் பகலுக்கும் இடையே
அந்தி வானமென கொஞ்சம்
சிந்திய பூமி

மிச்சம் வைத்தல்
எதுவாகவும் இருக்கலாம்
ஆசுவாச சிந்தனை
மிச்சதுக்கு சற்று முந்தி

எதிர் வருபவரை
நிமிர்ந்து பார்க்கிறேன்
தலை குனிந்திருக்கிறது
சற்று முன் இடம் மாறிய சாலை

எங்கிருந்தும் எட்டிப்பிடிக்கலாம் போல
யோசிக்கிறேன்
நிறம் மாறா சாலை முழுக்க
வெவ்வேறு காரணங்களும்
ஒரே ஒரு காரியமும்...!

*

## குடத்தின் நடுக்கம்

அசைந்து தவழும் தந்திரமற்ற
வெற்று வாய்களில்
கழுத்தெல்லாம் தாகம்

அற்ப மாயை வண்ணங்களோடு
வரிசையாய் மண்டியிட்டு கிடக்கையில்
மறுகும் வெளி ஓசை

வெயில் குடித்து வயிறு வீங்கி சாக
வரம் பெற்ற முதுகில்
சாயம் போன காலம்

பிருஷ்டம் வலிக்க
பித்துக்குளி பாவனையில்
ஐயோவென அடி வயிற்று வளையம்

தண்ணீர் லாரியை உரிந்தெடுக்கையில்
துருப்பிடித்த ரத்தமும்
குளம் கக்கிய யுத்தமும்

*

## பாலம்

கடந்து விடுவது பற்றி தெரியும்
அமர்ந்திருக்கும் பெஞ்ச்
ஒரு நீள் சமன் திருப்தி
விழும் இலைகளுக்கும்
பழுத்த சருகுகளுக்கும்
அதனதன் தூரம்
கிழக்கிலிருந்து நேராக
ஒரு மேற்கு
திரும்பிய கழுத்தில்
துளி கூட வளைவு இல்லை
தூரத்து சத்தம்
அது தான் அது தான்
ஒற்றை சொந்தம்
அதற்கும் பச்சை காட்டி
கடந்து விட செய்கிறான்
வெள்ளுடை தரித்த தேவதன்
ஒவ்வொரு ஜன்னலாலும்
படம் பிடித்தபடியே செல்லும்
இந்த ரயில்
இப்போது தன்னையே பாலமாக்கி

கிழக்கையும் மேற்கையும்
இணைத்தபடியே செல்கிறது
கூடவே
பெஞ்சில் அமர்ந்திருக்கும்
தனியனை
குறைந்தபட்சம் இருபது
நகலாக்கியும்....!

*

## வனம் அலையும் மிருகம்

மூடியிருக்கும் வாயிலிருந்து
விழும் வார்த்தைகள்
அசையாத முகத்திலிருந்து
விதவிதமான பாவனைகள்
கட்டப்பட்ட கைகளில் எழும்
ஜாடை மாடைகள்
உடைந்தொதுங்கிய கால்களில்
நீளும் நடைபாதை
கழுத்து மட்டும் திரும்பும்
கதம்பம் என
ஓவிய கூட்டை கலைத்தபடியே
இரு கண்கள்
பல கண்கள்
தொடர் கண்கள்
சுவற்றில் நடக்கும் பொம்மலாட்டம்
காண காண முடியாதது
புரிந்தவன் காத்திருக்கிறான்
யாருமற்ற இரவில்
தனித்திருக்கும் அதன் கண்களில்
வனம் அலையும் மிருகத்தின்
வெறியேறிய ஒளி கோடுகள்...!

—

கவிஜி

---

# உயிரும், உடையும்

அந்தக் காலத்தில்
அதிகாலையில் எழுந்து
வீடு வீடாக பேப்பர்
(செய்தித்தாள்)
போட்டுவிட்டுத்தான்
பள்ளிக்கு வந்து
படித்தேன் என்று
தலை நிமர்ந்து கூறும்
போது அந்த உழைப்பு|
விடா முயற்சி,
தன்னம்பிக்கை
இவைகள் எல்லாம்
அந்த வார்த்தையில்
தெரிந்தது என்பதை
எப்போதோ செய்தித்
தாளில் படித்த ஞாபகம்
வர அவசர அவசரமாக
அதிகாலை எழுந்து
அங்குமிங்கும் கிழிந்த
மேல் சட்டையும் அரைக்கால்
சட்டையும் அணிந்துக்
கொண்டு
பழைய கோணிச்சாக்குப்
பையை தூக்கி
தோள்மீது
போட்டுக்கொண்டு
வீதி விதியாக

பழைய பொருட்கள்
சேகரிக்கச் சென்ற
ராகவனை தன்
பக்கம் ஈர்த்தது
எதிர்முனையில்
இருந்த துணிக்கடையின்
விளம்பர பொம்மை
சிறுவன்.

அந்த பொம்மையையே
சிறிது நேரம்
உற்றுப் பார்த்த
ராகவன்
"உனக்கு உயிர் இல்லை.
ஆனால் நல்ல விலையுயர்ந்த
உடைப் போட்டுள்ளாய்
"எனக்கு நல்ல உடை இல்லை.
ஆனால் உயிர் இருக்கு
இது தான் நவீன
உலகம் போல என
எண்ணிக் கொண்டே
தன் வேலையில்
கவனம் செலுத்தத்
தொடங்கினான்

--

முற்றும்.

மு. ஜெரோஷா,
திருப்பூர்.

---

# சொரணையற்று வாழ்தல்

காமம் பிதுக்கியெறிந்த
உயிர்ப் பிண்டமோடு
தலைசாயும் நாள்வரை
வாழப்பணித்த காலத்தின்
விதிசெறிந்த சகதியில்
ஆழப்புதைத்த காயங்கள்
மீண்டெழும் வலியால்
இதயம் நொறுங்கி
விழிகளில் வடிக்கும்
கொந்தளித்த அருவியை

வன்மம் செறிந்து பொழியும்
பெருமழை கூச்சலை
யாரும் எதிர்க்கத் துணியாது
திரளான கீழ்மையைத்
திசைகளின் சுவரில்
செதுக்கிக் கொண்டாடும் அறம்
கண்டும் காணாமல்
யாவரின் முன்னும்
ஊர்வலம் வரும் நலத்துடன்

தராசு நிறையும் பெருநிதியை
எடையிட வலுவின்றி
நீதி ஒய்வறை நுழைகையில்
தங்குத்தடை ஏதுமின்றி
இறைவியைச் சிதைத்திடும்
அதிகார துஷ்டம்
கண்முன்நிகழும் அப்பட்டமாய்

நம்மின் கதவுகள்
தகர்க்கப்படாதவரை
நம்மின் உணவு
பறிக்கப்படாதவரை

நம்மின் உறக்கம்
களைக்கப்படாதவரை
நாளேடுகளை
இலகுவாய் திருப்பி
நாட்களை மாதங்களை
வருடங்களைக் கடத்திச்
சொரணையற்று வாழ்தலின்
கேடுகெட்டதைக் காற்றில்வீசி
எதையும் கடந்து செல்லவும்
நெரிசலில் நின்று
இலவசம் வாங்கித் துய்க்கவும்
வரிசையில் முந்திடலாம்
அதீத நிதானத்துடன்.

## அதிகாரத்தின் கொடுஞ்சாயம்.

மணலற்ற நதியில்
ஆர்ப்பரிக்கும் வெள்ளம்
பயணற்றக் குருதி.

மழையுடன் வீழ்ந்த ஒற்றைச்சொல்
கடலின் ஆழத்தில் வீழ்ந்து
அலைகளின் வாயால் கதருகிறது.

காற்றின் மௌன விரதத்தைத்
திட்டமுடன் களைத்து
நறுமணந்து இரசிக்கிறது மலர்வனம்.

ஊரையும் சேரியையும் பிரித்து
நிரம்பி நகரும் கால்வாய்
பீக்கழுவப் பொது.

அழுக்கை வெளுப்பவன் கைகளில்
அடையடையாய் அப்பியிருக்கிறது
அதிகாரத்தின் கொடுஞ்சாயம்.

பசித்த வயிற்றின் பள்ளத்தில்
பசியே நிரம்பி வழிய
தொப்பையோடு வளர்கிறது வல்லரசு.

குளத்து நீரில்
கோலமிட்டு விளையாடும்
தாழப்பறக்கும் தட்டான்.

கோவணம் கட்டும் கயிற்றில்
இறுகிய முடிச்சுகளாய்
தன்மானம்.

புற்களின் தலையில்
தற்காலிக மணிமுடி
விடியல் பனித்துளி.

புதிதாய் பணியமவர்பவரின்
பெயரை அறிவதற்குள் தெரிகிறது
அவரென்ன ஆளு.

சாலையெங்கும் பறக்கும் புழுதியில்
முடிவற்றப் பயணத்தின்
ஆறாத இரணங்கள்.

அடர்ந்து பொழியும் மழைக்கும்
படர்ந்து காயும் வெயிலுக்கும்
சாதியில்லை
சமயமில்லை
சண்டையில்லை
மண்ணுமில்லை
ஒரு மயிருமில்லை!

## சேருமிடம் நரகம்

தலைகள் கொய்து
கிளைகள் முறித்து
வேர்கள் அறுத்து

உயிரற்று வீழும்
ஒவ்வொரு மரத்திற்கும்
யாரேனும்
என்றேனும்
நேசித்துச் சூட்டிய
செல்ல பெயரிருக்கும்
நிச்சயம்

கொளுத்தும் கோடை
கொழிக்கும் அடைமழை
குளிர்த்தும் மூடுபனி
எல்லாக் காலத்தின்
இளம்பருவ நாட்களை
வீடுகள் தொலைத்துக்
கபடி
கண்ணாமூச்சி
பம்பரம்
கோலி
ஆபியம்
கோட்டிப்புல்
சோடிப்புறா
கல்லா மண்ணா
ஆடித்திரியும் விழாக்களம்
வீதியோர நிழல்மரம்

பள்ளி நாட்களில்
பிற்பகல் தேர்வுக்கு
முற்பகல் பயிற்சியும்
முற்பகல் முடிவில்
சோட்டுப்பிள்ளைகளோடு
பரிட்சை விவாதம்
பங்கீட்டுத் திண்பண்டம்
வெட்டிநியாயம்
வெயில்தாழக் காத்திருப்பு
விறகு சேகரிப்பு
வெளியுலக வகுப்பறை
ஆசிரியர்களுக்கு அடுத்தப்படி

புங்கைமரம் தோழி
புளியமரம் போதி
வேப்பமரம் ஞானி

விடலைக் குறும்புடன்
வீசும் கற்களால்
விழும் புளியம்பழங்கள்
அரைமணி நேரத்தில்
மிதிவண்டி வியாபாரியின்
சேமியா ஐஸ்ஸாகவும்
முந்திரிப் பழமாகவும்
சோன் பப்டியாகவும்
சவ்வு மிட்டாயாகவும்
பண்ட மாற்றாகிப் பசித்தீர்க்கும்
வறுமை வயிற்றை

பறவைகள்
அணில்கள்
பல்லிகள்
பாம்புகள்
உடும்புகள்
ஓணாண்களின்
வீடுகள் அழிந்து
கூடுகள் குலைந்து
திசைக்கொன்றாய்
திரும்ப வழியின்றிப்
அகதிகளாய் புலம்பெயர
இராட்சத இயந்திரத்தால்
இரக்கமின்றிக் கூறிட்டுச்
சரக்குந்துப் பாடையில்
மரப்பிணங்களை ஏற்றி
கோடிப்பணம் சம்பாதித்து
கோட்டையில் வாழ்வது
வாயற்ற உயிர்களின்
வானளவுச் சாபங்கள்.

## பாவத்தின் உண்டியல்

மிச்சமில்லாமல்
யாவற்றையும் இழந்தபிறகு
விலகாமல் பின்தொடர்வது
காலம் தின்று கழித்த
ஏமாற்றத்தின் கழிவுகள்

ஆளுக்கேற்றார்போல்
அவதரிக்கும் தந்திரம் கற்று
நெளிவுசுளிவோடு
விருந்தாய் அருள்பாலிக்கும்
இறைவனின் ஆலயத்தில்
கோடிகோடியாய் நிரம்பிடும்
பாவத்தின் உண்டியல்

வனத்தை விலகிய
களிற்றின் பசித்த வாயால்
வெளியெங்கும் மேய்கையில்
திசைகளெங்கும் நிரம்பியுள்ளன
வன்மங்கள் நிறைந்த பலகாரம்

முடிவுகளற்ற சாலையில்
விரையும் பயணங்கள் குறித்த
எவ்விதச் சலனமுமின்றிப்
மலர்களைப் பூத்துத்
துயரகற்றும் மரங்களில்
கருணையின் பேரருள் மிளிர்வது
யாரும் அறிந்திட வாய்ப்பில்லை

பம்பரமாய் சுற்றும்
கடின உழைப்பின் தலையில்
மலையெனச் சுமைகள் ஏற்றி
வறுமையின் சிலுவையில்
தினந்தினம் அறைந்து
வியர்வையால் பொதிந்து
வலிகளால் மகிழ்ந்து
உயிர்க்கசியும் தேவதுதர்கள்
உறக்கத்தின் மரணத்திற்கப்பால்
விழித்தெழுதல்
அடுத்தநாள் வைகறை.

—

பொன். தெய்வா,
ஐவேலி.



---

## காதல்

மகிழ்ச்சியை உண்டாக்குகிறது
துன்பத்தை உண்டாக்குகிறது
கோபத்தை உண்டாக்குகிறது
அமைதியை உண்டாக்குகிறது
வெற்றியை உண்டாக்குகிறது
தோல்வியை உண்டாக்குகிறது
கவிதையை உண்டாக்குகிறது
கவலையை உண்டாக்குகிறது,
ஒன்றால்
எல்லாவற்றையும்
உண்டாக்ககூடிய ஆற்றல்
கடவுளைப் போல காதலுக்குமிருக்கிறது!

—

மு.முபாரக்,
திருச்சி.



# துளிப்பாக்கள்

சுட்டெரிக்கும் வெயில்
வற்றிடவில்லை
வறுமையின் கண்ணீர்

சருகுகளின் இசை மழையில்
முழுமையாய் நனைந்தது
பூங்கா.

கரையேறிய பின்பும்
மனதில் அலை மோதியது
ஓடம்

காதலனுக்காக காத்திருக்கிறாள்
அவள் மீது விழுந்தன
பார்வைகள் அனைத்தும்

அரை தூக்கத்தில் கதிரவன்
வெண்பாக்களை வாசிக்கிறது
குளிர்காலம்

காற்று தாலாட்ட
உறங்குகிறது வானம்
கிணற்றுக்குள்

சம நிலைக்கு வருவதற்குள்
காலம் கடந்துவிடுகின்றன
நீதியின் தராசு

பூக்கள் வேண்டி
இலைகளோடு தவம் புரிகிறது
வண்ணத்துப்பூச்சி

தாய் வீட்டில் பிரசவம்
துடிக்கிறார்
தந்தை

விருது கிடைத்து விட்டது
குழந்தைகளிடமிருந்து
நல்லாசிரியர்

நிழலை தருகிறது
கன்றுக்கு
தாய் பசு

மாணவர் சேர்க்கையின் போது
கேட்க கூச்சம்
என்ன சாதி?

திறந்து மூடும் முகம்
இதயம் நின்று துடிக்கிறது
அடையாளம் காட்டப்படும் பிணம்.

குடை விரிக்கின்றன
எப்பொழுதும்
மரங்கள்

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம் | 6380704001



# சமுதாய வெற்றியில் நாம்!



"நாடென்ன செய்தது எனக்கு என கேட்காதே.நான் என்ன செய்தேன் நாட்டுக்கு என உன்னை நீயே கேட்டுக்கொள்" என்றார் கென்னடி.

மனிதர்கள் எல்லோரும் தன்னை நோக்கி எழுப்ப வேண்டிய கேள்வி இது. எந்த ஒரு தனி மனிதரும் எந்த நிலையில் இருந்தாலும் அதற்கு முக்கிய காரணம் நாம் வாழும் சமுதாயம் அடங்கிய இந்த நாடே.நம் வளர்ச்சியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவியாய் இருந்தது இந்த சமுதாயமே.

அந்த சமுதாயத்திற்கு நாம் வளரும் போது என்ன கைமாறு செய்தோம் என்று எண்ணிப்பார்த்தால், அவரவர் மனசாட்சி அதனை சொல்லும். ஆனால் பெரும்பாலும் மனிதர்கள் தான் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கிறார்கள், இந்த சமூகத்தை பற்றி கவலைப்படுவதில்லை.

ஒரு மரம் சிறிதாக இருக்கும்போது ஒரு குருவி வந்து அதில் கூடு கட்டியது.பிறகு குஞ்சு பொரித்து குடும்பமாக வளர ஆரம்பித்தது, மரமும் கூடவே வளர ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் குருவி தன் சந்ததிகளை வளர்த்து பெரிய கூட்டமாக உருவானது.

அப்போது மரம் உயர உயர வளர்ந்து பெரிதானது. அப்போது குருவி கேட்டது "ஏய் முட்டாள் மரமே நீ சிறிய மரமாக இருந்தாய், நான் கூடு கட்டுவது எளிதாக இருந்தது, இப்போது இவ்வளவு உயரமாக வளர்ந்து நிற்கிறாய், எனது சந்ததிகளுக்கு அவ்வளவு உயரத்தில் வந்து எப்படி கூடு கட்டுவது?" என்று கேட்டது.

அதற்கு மரமோ "குருவியே நீ சிறு பறவையாக வந்து கூடு கட்டும் போது நான் சிறிய மரமாக இருந்தது உண்மைதான், இன்று நீ வளர்ந்து உன் சந்ததிகளுடன் கூட்டமாக இருக்கிறாய். நீ வளர வேண்டும் என்று நினைத்தாயே, நான் வளர வேண்டும் என்று நினைத்தாயா?". இந்த சமூகத்தில் நாம் வளர வேண்டும் என்று நினைக்கும் ஒவ்வொருவரும், இந்த சமூகம் வளர வேண்டும் என்று நினைத்தால் தனி மனித வெற்றியும், சமுதாய வெற்றியும் சாத்தியமே.

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர், உளவியல் ஆலோசகர்,
மன்னார்குடி.

# குறுங்கவிதைகள்

வயல் பொம்மையை கண்ட
ஜன்னல் இருக்கை சிறுமி
ஆமென் என்கிறாள்.

●

குழந்தையின் கிறுக்கல்கள்
ஒவ்வொன்றிலும்
ஒரு கதை இருக்கிறது.

●

காகிதக் கப்பல்
நின்ற இடத்தில் அப்பாவை
காட்டுகிறது மதுக்கடை.

●

இறந்தவர்
நெற்றிக்கண் திறந்துக் காட்ட
ஒற்றை நாணயம்..

●

எதைப் பற்றியும்
அதிகம் அலட்டிக் கொள்வதில்லை
பிரபஞ்சத்தின் சூட்சமம் அறிந்தவர்.

—

சாயிராம்,
தஞ்சாவூர்.
கைப்பேசி: 9443394625

---

# ஒளியூசி

250 கிராம்
சுமையோடு கரங்கள்

விழிகளில் ஊடுருவி
நுழையும் ஒளியூசி

இயங்குவதற்காக
மட்டுமே பிறந்ததாய்
கட்டைவிரல்

எதற்கு ஆன்
எதற்கு ஆஃப்
என்றறியா சிறுமூளை

நாளின்
பெரும்பொழுதுகளை

இவ்வாறு கடத்திவிட்டு
'லிவ் தி மொமண்ட்'
என்கிறது ஸ்டேட்டஸ்!

## பதில் ரேகை

அளிக்கும் 'கருத்துக்களில்
அவர் பயன்படுத்தும்
சொற்கள் இல்லை

'நிலை' எப்பொழுதும் பார்க்காதவர்
இப்பொழுது
பார்த்துக்கொண்டிருக்கிறார்

விருப்பம் தெரிவித்து
வரும் கட்டைவிரல்களில்
அவரது ரேகை இல்லை

முதல்முறையாக
பிறந்தநாள் வாழ்த்தும்
அனுப்பியிருக்கிறார்

இறந்தவரது பெயரில்
பரிட்சயமற்ற ஆசாமி
தொடர்கிற முகநூல்
கணக்குதான்

இருப்பினும்
என்னுடைய 'நன்றி ஐயா'
அவரை உயிர்ப்பித்து வைத்திருக்கிறது.

---

ரகுநாத். வ,
மதுரை.

---

# காதலுக்கு கண் உண்டு

கண்ணில்லா காதலில் கண்கள் என்ன
செய்யும் என்றேன்..?
காதலின் சாரம்சமே பார்வை தானாமே
சரிதான் பார்த்து விடுவோம் என்றேன்..?

என் கண்கள் விரித்து கர்வத்தோடு
உன்னை பார்த்தேன்.
விழிமூடி வெட்கம் கொள்ளாமல்
விவரமாய் பார்ப்பதாய் எண்ணி
உன்னை பார்த்தேன்.

மெதுவாய் என் மனம் பரிதவிப்பதை
காட்டிக்கொள்ளாமல் பக்குவமாய்
பார்த்தேன்.

நேரில் கண்டால் பயப்படாதே கண்ணே
நேர்கொண்ட பார்வை பார் என்றே
என்னை நானே எச்சரிக்கத்
தொடங்கினேன்.
நெருங்கிப் பார்த்தால் படபடக்காதே
நெஞ்சமே என எத்தனித்தேன்.

கண்கள் திறந்து உன்னை காண
வந்த நான் இன்று
என்னை மறந்து
உன்னை
பார்க்கிறேன். என்
உணர்வுகளை உன்
விழிகள் கடத்தும்
விதத்தை
விரும்புகிறேன்.



திரும்ப திரும்ப பார்க்கிறேன்
தெரியாமலும் பார்க்கிறேன்
ஒன்று மட்டும் தெளிவாய் தெரிந்தது
உன்னை
திகட்ட திகட்ட பார்த்து
திக்குத்தெரியாமல் போனேன்
என்பது....!!!!!

ஏன் பார்க்கிறேன் ஏதனால் பார்க்கிறேன்
என்பதே விளங்காமல் விடாமல்
பார்த்துக்கொண்டிருக்கும் நான் என்னுள்
எழுந்த வினாவிற்கு உன் விழியில்
நுழைந்து விடை கண்டேன்.

விதவிதமாய் பார்க்க முயன்றும்
தொடர்ந்து வீழ்கிறேன்.
வெறுத்து பார்க்க துணிந்து உன்னை
வெறித்து பார்க்க ஆரம்பித்துவிட்டேன்.

உன்னிடமிருந்து
விலகி நின்று பார்த்தாலும்
என் வேட்கை குறையவில்லை
விருப்பம் விடவில்லை
வெட்கத்தை காணவில்லை.

எதிர்பார்வைக்கு
ஏங்க ஆரம்பித்தேன்.
உன் விழுங்கும் விழிகளில்
விழுந்து கிடக்கிறேன்.கொஞ்சமும்
மிச்சமின்றி
முழுவதுமாய் உன்னிடம்
தோற்றுப்போனேன்.
உன்னை
பார்த்து,பார்த்தே நான் தீர்ந்து
போனேன்.

காதலில் கண்கள் என்ன செய்யும்
மென்று அறிந்தேன். உன்
பார்வைக்கும் பாரம் உண்டு பாவம்
உண்டு பாசை உண்டு
என்னை பாடாய் படுத்தும் போதை
உண்டென்ற உண்மை கண்டேன்.

கண்களில் காதல் மிளிர்ந்து
காமம் பெருக்கெடுக்கும் என்
ஆசையினை
அசுவாசப்படுத்திக்கொள்கிறேன்
நான்..
உன்னை உற்று பார்த்து உறக்கம்
கெட்டு அன்றாடம்
பார்வையிலேயே உன்னை
அணைக்கிறேன்.
கைப்பிடிக்க எண்ணி கண்ணீர்
வடிக்கிறேன்.

என் மௌனம், மயக்கம், கலக்கம்,
தயக்கம்....
என் மோகம், தாகம், சோகம், தீர்க்கும்
கருவி உந்தன் விழிகள் என்பேன்.

உயிர்தனில் கலந்து
உடல்மொழி பேசும் வேளையிலும் உன்
விழிமொழி வேண்டுமென்பேன்.
கண்ணா..!!!!
உன்
கண்ணோடு கண் பார்த்து பேசும் காதலி
இவள்

—

*G. சூர்யகலா சரவணன், B.E,*
கண்டிதம்பேட்டை, மன்னார்குடி.

# தென்னை....

தென்னவனுக்கு தேன் தோற்கும்
தென்னங்கள்.

மன்னவனுக்கு மதிமயக்கும்
கன்னிக்குரும்பைகள்.

பாங்காய் புசிக்கத் தருவாள் தென்னை.
தேங்காய் ருசிக்கச் செய்வாள் தன்னை.
மன்னன் ருசியாற்றும் செவ்விளநீராகும்
உன்னியவன் பசி ஆற்றும் உளநீராகும்

--

*மதீரா,*
அறிவிப்பாளினி,
இலங்கை.

# நம் தமிழ் முன்னோர்களின் மருத்துவமும் மகத்துவமும்!

நம் தமிழ் மூதாதைகள் செய்து வைத்த ஒவ்வொரு செயலிலும் ஆயிரம் அறிவியல் உள்ளார்ந்த மகத்துவம்படைத்த மருத்துவ குணங்கள் அடங்கியிருக்கிறது. அவர்கள் கண்டறிந்து செயல்படுத்திய, காலங்காலமாக வழக்கத்தில் இருந்து வரும் பாரம்பரிய முறைகள் ஒவ்வொன்றும் நம் தமிழர்களின் அறிவியல், அனுபவ அறிவுச்செயல்கள். பொதுநலன் கருதி, நன்மை உண்டாகும் ஒரு செயலை நம் மக்களை இயல்பாக செய்ய சொன்னால் அதை செய்யமாட்டார்கள், ஆகவே அந்த செயலுக்காக அதனுள் ஒரு இறைவழிபாட்டை உண்டாக்கி அதை நம் மக்களை கடைபிடிக்க வைத்தனர்.

இன்றைய கால சூழலில் நம் அன்றாட வாழ்வில் நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் ஏன் செய்கிறோம், எதற்கு செய்கிறோம், என்று தெரியாமலே செய்கின்றோம். ஆனால் நம் முன்னோர்கள் காலத்தில் வகுக்கப்பட்ட ஒவ்வொரு பழக்க வழக்கத்திற்கு பின்பும் அத்தனை அறிவியல் காரணங்கள் புதைந்துள்ளது. இந்த செயல்களை ஒவ்வொன்றையும் உணரும்போது நம் முன்னோர்கள் ஒவ்வொருவரும் ஆகப்பெரிய ஞானம் படைத்தவர்கள் என்றே தோன்றுகிறது.

கோவில் குளங்களில் கால் நனைப்பதும்,குளிப்பதும் பெரிய புண்ணிய செயல் என்பதும் மருத்துவமே! ஏனென்றால் செம்பு உலோகத்தில் உருவான பாத்திரங்களில் நீர் பருகினாலோ, உணவருந்தினாலோ உடலுக்கு நன்மைகள் அதிகம். உடலில் எதிர்ப்புசக்தி அதிகரிக்கும். ஆகவே அன்றைய காலங்களில் நம் மக்கள் செம்பினால் தயாரிக்கப்பட்ட நாணயங்களை இறைவழிபாட்டின் பின்னர் கோவில் குளங்களில் போட்டு விட்டு வருவது வழக்கம். ஆக அந்த நாணயங்கள் நீரில் முழுகி அந்த நீரின் அசுத்தத்தை நீக்கி தூய்மையான எதிர்ப்பு சக்தி வாய்ந்த நீராக மாற்றுகிறது இது தான் கோவில் குளநீரின் மகத்துவம்!

ஏன் ஆடி மாதத்தில் அம்மனை வேண்டி கூழ் ஊற்றும் மரபு நம்மிடம் கடைபிடிக்கபடுகின்றது என்றேனும் சிந்தித்திருப்போமா? இதனால் தான். இன்றைய காலகட்டத்தில் பல நவீன முறை தடுப்பூசிகள், மருந்துகளால் அம்மை நோய் வெகுவாக குறைந்துள்ளது, ஆனால் சில நூறாண்டுகளுக்கு முன்பு வரை அம்மை நோயால் இறப்பின் விகிதம் அதிக அளவில் இருந்திருக்கின்றது. அந்த காலகட்டத்தில் பல நோய்கள் மக்களை தாக்கியிருந்தாலும் அம்மை நோய் மிகக்கொடியதாக கருதப்பட்டது.

இதை கட்டுப்படுத்த இதன் காரணம் ஆடி மாதத்தில் நிலவும் அதிகப்படியான தட்ப வெப்பநிலை தான் என்பதை அறிந்த நம் முன்னோர்கள், உடல் சூட்டை தனித்து உடம்பை

குளிர்விக்கும் கம்பையும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் கேழ்வரகையும் பயன்படுத்தி கூழ் காய்ச்சி அருந்தினர். வறுமையின் காரணத்தால் எல்லோராலும் முடியாததாலும், இறப்பை கட்டுப்படுத்த இந்த வழக்கத்தை உருவாக்க எண்ணியும் நம் முன்னோர்கள் ஒவ்வொரு ஆண்டும் அம்மன் வழிபாட்டை முன் நிறுத்த துவங்கினர்.

பொங்கல் பானையில் இஞ்சி மற்றும் மஞ்சள் கொத்துக்களை காட்டுவதும் ஆகப்பெரும் மருத்துவகுணமே! அன்றைய நாட்களில் காடுகளில் கிடைத்த பல காய்களை புதிதாக விளைந்த அரிசியில் பொங்கலிடும் போது அதில் ஏதேனும் விசத்தன்மை இருந்தால் அதை நீக்கவே மஞ்சளையும், செரிமாணத்திற்காக இஞ்சியையும் பானையில் கட்டினர். பொங்கல் பானை வெந்து சூடேறும்பொது அதனுடன் மஞ்சள் மற்றும் இஞ்சியின் மனம் வெளியேறி நஞ்சை நீக்கும் என்ற மருத்துவமே இந்த செயலின் பின்புலம்.

பெண்களை பூ வைக்க நம் முன்னோர்கள் சொல்வது, பூக்களில் இருக்கும் உயிர்க்காற்று மூளையால் ஈர்க்கப்பட்டு மூளையை புத்துணர்வு பெறச்செய்து மனஅழுத்தத்தை குறைத்து மன நிம்மதியை கொடுக்கும் என்பதால் தான். திருமணம் தொடங்கி பெண்களை மெட்டி அணியச்சொல்வது கால் கட்டை விரலின் அடுத்த விரலில் தான் கருப்பையின் நரம்பு நுனிகள் உள்ளன. மெட்டி அணிந்து நடக்கும் போது அழுத்தத்தினால் கருப்பை நன்கு வளர்ச்சி அடையும் என்ற மருத்துவ குணத்தினால் தானாம்.

அதே போன்று பெண்களை பேறு காலத்தில் ஏழாவது மாதம் வளைகாப்பு நடத்தி இனிப்பு, புளிப்பு என்று அறுசுவையில் வித விதமான சுவையில் உணவை கொடுத்து அந்த பெண்ணை சுவைக்க சொல்வது வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு சுவைத்தன்மையை உணரச்செய்யவும், கண்ணாடி வளையல்களை அணிய சொல்வது தாயின் கை அசையும் நேரம் அந்த கண்ணாடி வளையல்களின் சத்தம் கேட்கும் போது வயிற்றில் இருக்கும் குழந்தை கேட்கும் திறன் அறியும் என்ற மகத்துவ முறைகள் தான்.

வாழையிலையில் உணவு உண்டால் நோய் நொடியின்றி நீண்ட நாள் உயிர் வாழலாம் என்று முன்னோர்கள் சொல்வதின் பின்புலம் என்னவென்றால், சூடான சோற்றை வாழையிலையில் போடும்போது வாழையிலையிலுள்ள குளோரோபில் என்ற பச்சை தன்மை அந்த சூட்டுடன் சேர்ந்து வினைபுரிந்து உணவை எளிதில் சீரணமடைய செய்வதோடு வயிற்று புண்ணை ஆற்றி நன்கு பசியை தூண்டும் மருத்துவ குணம் கொண்டது என்பதால் தான்.

ஆலமரம், அரசமரத்தை சுற்றினால் நல்லது என்று சொன்னால் நம் மக்கள் கேட்கமாட்டார்கள் என்று அங்கு ஒரு பிள்ளையாரை வைத்து இறைநம்பிக்கை மூலம் மருத்துவத்தை விதைத்தனர். ஆலமரம் நாள் முழுவதும் மூச்சுக்காற்றை வெளியிடுகிறது ஆகவே ஆலமரக்காற்றை சுவாசித்தால் உடலுக்கு நன்மை என்ற அறிவியல் பின்புலமே.

அரசமரம் வெளியிடும் காற்றை முக்கியமாக திருமணமான பெண்கள் அரசமரத்தை சுற்றும்போது அரசமர வாடைக்காற்றை சுவாசித்தால் கருப்பையின் ஏதேனும் அடைப்பு இருந்தால் நீங்கி இனம் விருத்தியடையும் என்பது ஆகச்சிறந்த மருத்துவமுறை.

வேப்பமரம் பகலில் உயிரகாற்றை வெளியிட்டு இரவில் வாயுக்காற்றை வெளியிடும் தன்மை உடையது, அந்த வாயுக்காற்று மூச்சுத்திணறலை உண்டாக்கி மரணத்தை ஏற்படுத்திவிடும் என்ற அறிவியலை நம் மூதாதைகள் அறிந்ததால் தான் இரவு நேரங்களில் வேப்பமரத்தின் கீழ் நிற்பதோ, தூங்குவதோ கூடாது பேய் அடித்துவிடுமென்பதும். தூளசியை வீடுதோறும் மாடங்களில் வளர்க்க சொல்வது தூளசி 24 மணிநேரமும் உயிர்காற்றை வெளியிடும் என்ற அறிவியல் தான்.

மாவிலையை இறைவழிபாட்டில் பயன்படுத்தி வருகின்றோம், புதுமனை புகு விழாக்களிலோ, திருமண நாட்களிலோ அல்லது வீட்டிலோ அல்லது பொது இடங்களிலோ சுபநிகழ்வுகளிலும், கோயில்  திருவிழாக்களிலும் மாவிலை தோரணங்கள் கட்டுவதை அறிவோம். அதன் காரணம் என்னவென்றால் மாவிலை ஒரு கிருமி நாசினியாக அமைந்ததை பல நூறாண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர்கள் தம் சித்தின் மூலம் அறிந்துவைத்திருக்கின்றனர்.

இந்த மாவிலை அசுத்தமான காற்றை சுத்தமான காற்றாக மாற்றி நோயுண்டாக்கும் கிருமிகளை அளிக்கும் மகத்துவம் கொண்டதாம். ஆகையினால் தான் நம் முன்னோர்கள் ஆழமான கிணற்றை சுத்தம் செய்யும் பொழுது முதலில் இறங்குவதற்கு முன் மாவிலையை பறித்து கயிற்றில் கட்டி கிணற்றில் இறக்கி சுழற்றி விட்டு பின் வெளியே எடுத்த பின் சுத்தமான காற்று உருவான பிறகு கிணற்றில் இறங்கும் வழக்கத்தை கொண்டிருந்தனர்.

"உடம்பை குளிர்வித்தல்" என்பதே நாளடைவில் மருவி "குளித்தல்" என்றானது. குளிர்வித்தல் என்ற நம் முந்தையரின் முறை உடல் வெப்பத்தை வெளியாக்க நீரால் உடலை நனைப்பது பாதத்தில் தொடங்கி தலை உச்சியில் முடியவேண்டும் அப்போது தான் உடலின் முழுவெப்பமும் கீழிருந்து மேலேறி காது,கண் துவாரங்கள் வழியே வெளியேறும் என்பதாகும் அதனால்தான் பண்டைய நம் குளக்கரை அமைப்பு சரிவான படித்துறையாக கட்டமைக்கப்பட்டது இதுவும் மருத்துவகுணமாகும்.

இறந்தவர்களின் வீட்டில் சமைக்ககூடாது, இறப்புக்கு சென்றுவந்தால் குளிக்கவேண்டும் என்பதும் அவர்கள் வீட்டில் 14 நாட்களுக்கு பிறகே சமைப்பது மற்றவையெல்லாம் என்பதும் நோய்க்கிருமிகள் பரவாமலிருக்க தனிமைப்படுத்தும் பழக்கத்தை அன்றே நம் தமிழன் தெரிந்து வைத்திருந்திருக்கின்றான். இது போன்று வீட்டின் வாயிலில் சாணம் தெளிப்பது, வீட்டை கிருமிகள் அண்டாமல் இருக்க கிருமி நாசினியாக செயல்படும்

என்பதற்காகத்தான். வேப்பிலை கட்டுவதும், கைகளில் மஞ்சள் காப்பு கட்டுவது இது எல்லாமே நம் தமிழர்களின் உயிர்க்கொல்லி முறைகள்.

சளி பிடித்தால் மிளகு ரசம்,தூதுவளை, ஆடாதொடை அடை, இருமல் இருந்தால் பனங்கற்கண்டு, மலச்சிக்கலுக்கு விளக்கெண்ணெய், மெலிந்த உடம்பைத்தேற்ற நாட்டுக்கோழிச்சாறு, கண்டிதம்புலிச்சாறு, உடல் சூட்டுக்கு நல்லெண்ணெய், குடல் பூச்சிக்கு வேப்பெண்ணெய், தலைக்கு சிகைக்காய், பற்களுக்கு வேப்பங்குச்சி இதெல்லாம் கிராமத்து பாட்டியின் சித்தின் மூலம் அறிந்த எளிய மருத்துவமுறைகள்.

ஒன்று, இரண்டல்ல எண்ணிலடங்கா எத்தனையோ பாரம்பரிய மருத்துவமுறைகள், மகத்துவங்கள் அதன் பின் ஒளிந்திருக்கும் அறிவியல் ஒவ்வொன்றையும் படித்து அறியும் போது எந்த வித தொழிநுட்பங்கள், மருத்துவ வழிமுறைகளும் இல்லாத காலங்களிலேயே மதி நுட்பத்தினாலும், பட்டறிவாலும் தங்கள் சித்தின் மூலம் எவ்வளவு மருத்துவ முறைகளை கண்டறிந்து அந்த முறைகளை இத்தனை ஆண்டுகள் கழித்தும் "தாய்வழி மகள் காது வழி கேட்டு" பெரும் மரபில் இன்றுவரை கடத்தி வந்து போற்றி பாதுகாத்து வந்து பெருங்கொடையாக நம் இன்றைய தலைமுறைக்கு தந்த நம் முன்னோர்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆகச்சிறந்த மருத்துவர்கள் தான் என்பதே சாலச்சிறந்தது!

அவர்கள் நமக்களித்த இந்த அறிவியல் புதைந்த இயற்கை மருத்துவ முறைகளை நாமும் தொடர்ந்து பின்பற்றுவதோடு நம் நாளைய தலைமுறைக்கும் கடத்த வேண்டும்.

—

நா. செல்வமுருகன்,
சிங்கப்பூர்.





மா. நிரல்யா,
சிங்கப்பூர்.

# வேர்கள் வெளியே தெரிவதில்லை...

அந்த முதியோர் இல்லத்து வாசலுக்கு வந்த ராமனுக்கு லேசாக கண் கலங்க ஆரம்பித்தது பிள்ளை மனம் கல் தான்.

இல்லாவிட்டால் பெற்றவர்களை இந்த இல்லத்தில் சேர்க்க இயலுமா!

கடந்த சில மாதங்களாகவே மனைவி மீனாவின் போக்கு சரியில்லாததை அவனும் உணர ஆரம்பித்தான் .

உடல் தள்ளாமை காரணமாய் கிராமத்தை விட்டு தன் வீட்டிற்கு வந்த பெற்றோர்களை ராமன் ஒரு பாரமாகவே நினைக்கவில்லை.

ஆனால் மீனா முதலில் ஒழுங்காக இருந்தவள் பிறகு ஒரிரு வருடங்களில் சிறுசிறு சண்டை சச்சரவுகளுடன் அடியோடு மாறிப் போனாள்.

சில நாட்கள் முன்பு நிலைமை விபரீதம் ஆகிவிடும் முன்பு ராமன் வேறு வழி இல்லை என்று பெற்றோரை முதியோர் இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்து விட்டான்.

50 வயதிற்கு ராமனும் அரை முதியவன் தான்   பெண்ஒன்றும் பிள்ளை ஒன்றுமாய் இரண்டுபெரும் இருபத்திஐந்துவயதிலும் இருபதுவயதிலும் இருக்கிறார்கள்.

பழங்கள் ஹார்லிக்ஸ் அடங்கிய பாலிதீன் பையை ஞாபகமாய் எடுத்துக் கொண்டு ஸ்கூட்டரைப் பூட்டினான்.

மாலை நேரம் ஆனதால் இல்லத்தின் வெளித்தோட்டத்தில் ஆண்களும் பெண்களுமாக முதியவர்கள் கூடி அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் கண்களில் தனிமையின் சோகமும் ஏக்கமும் தெரிவது போல இருந்தது.

மனிதர்களுக்கு   ஏறும்வயதும் ஒரு சாபம் தான் போலிருக்கிறது!

பையுடன் அந்த புல் வெளியை ஒட்டிய கான்கிரீட் பாதையில் நடந்தான்.

"உன்னி கிருஷ்ணா எண்டமோனே" என்று மலையாளத்தில் கூறியபடி வேகமாய் நடந்து வந்த ஒரு வயதான பெண்மணி ராமனின் அருகில் போய் நின்று கொண்டு" "சுகந்தன்னே?" என்று பாசமும் பரிவுமாய் அவன் தலையை தடவி கேட்டாள்.

இராமன் தயக்கமும் குழப்பமாய் நிற்கும் போது இல்லத்து பணிப்பெண் ஓடி வந்து "அம்மா அம்மா! அவர் உங்கள் மகன் உன்னிகிருஷ்ணன் இல்லைமா வேறு யாரோ நீங்க அவருக்கு வழி விடுங்க" என்று வேறு புறம் அழைத்துச் சென்றாள்.

இராமனுக்கு அந்தப் பெண்ணை

பார்க்கும் போது மிகவும் பரிதாபமாக இருந்தது.

இதே போன்று முதியோர் இல்லத்தில் பெற்ற மகன் நினைவுகளில் கடந்து தவித்து அதை வார்த்தைகளில் கூற இயலாமல் நடைப்பிணமாய் இன்னும் இன்னும் எத்தனை முதியவர்களோ!

அறை வாசலுக்கு வந்தவனை தாயின் குரல் வருடியது.

"ராமா! வாப்பா வா!" எழுபது வயதிலும் உடல் மெலிந்து தளர்ந்து இருந்தாலும் இன்னமும் மனதில்உறுதி இருப்பதை உணர்த்தும் குரல்.

"இன்னைக்கு நீ வருவேன்னு தெரியும் நானும் உங்க அப்பாவும் கடிகாரத்தை பாத்துட்டு இருக்கோம்" என்றாள்.

"ஆமா வீட்ல மினா குழந்தைகள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள்?" என்று அம்மா கேட்டதும் ராமனுக்கு அடித்து துரத்திய தன் மனைவி பற்றி அக்கறையாய் கேட்கும் தன் தாயின் மீது பச்சாதாபம் ஏற்பட்டது.

இதற்கு என்ன பதில்சொல்வது! அப்பாவின் மௌனம் தேவலை போல் இருந்தது.

அவர் எதுவுமே பேசாமல் இருப்பதில் ஏதோ ஒரு தாக்கத்தை உனர முடிந்தது. அதையே தனக்கு தண்டனையாக ராமன் ஏற்றுக் கொண்டான் .

"ஆமா ராமா ஏதோ வசுமதிக்கு வரன் பார்த்து மெயில் போட்டியே அதுக்க்பதில் வந்ததா? வயசு 25 ஆகிறது ப்பா .. நல்ல வளத்தியா இருக்கா. சீக்கிரமா கல்யாணம் பண்ணனும்".

"அம்மா! மாப்பிள்ளை வீட்ல போட்டோ எல்லாம் பார்த்து பிடிச்சுட்டு தான் எழுதி இருக்காங்க இரண்டு ஒரு நாளில் பெண் பார்க்க வருவதையும் எழுதி இருக்காங்க".

"நிஜமாவா! ரொம்ப சந்தோஷ செய்தி! இத நீ வந்ததுமே கண்டேன் சீதையை என்கிற மாதிரி சொல்லி இருக்க வேண்டாமா?" என்ற ராமனின் தாய் மகிழ்ந்து போனவளாய் "என் பேத்தி கல்யாணம் கூடி வரப் போறது எல்லாரும் ஆசீர்வாதம் பண்ணுங்க" என்று அக்கம் பக்கம் இருக்கிற முதியோர்களிடம் தெரியப்படுத்தினாள்.

இராமனுக்கு கண் பனித்து போனது. பெற்றவர்களை உடன் வைத்துப் பேண இயலாத தனது கையாலாகாத தன்மைக்கு தன்மீது கோபமாய் வந்தது.

அப்போது பேண்ட் பாக்கெட்டில் இருந்த போன் ஒலித்தது எடுத்துப்பேசும் முன்பாக திரைல் whatsappபில் அவன் மனைவியிடம் இருந்து செய்தியும் வந்தது.

'அவசரம் உடனே வீடு வரவும்' என்று.

என்னமோ ஏதோ என்று குழப்பம்மேலிட. "அலுவலக வேலை

வந்திருக்கும்மா. அப்பா! அப்புறம் வரேன்" என்று சொல்லிக் கிளம்பினான்.

உடன் வீட்டிற்கு ஓடி வந்தவனை எதிர்கொண்டாள் அழுதபடி வந்த மீனா.

" என்ன ஆச்சு என்ன ஆச்சு ?*"என்று கேட்டான்  ராமன் அதிர்ச்சியுடன்.

"ஐயோ மோசம் போயிட்டோம். தன்னுடைய மாணவிகளோட போன டூர் இடத்துல தொழிலதிபர் விசுவநாத் மகள் ஊர்வசியுடன் நம்ம பெண் வசுமதியும் கடத்தப்பட்டிருக்கிறாங்களாம்" கதறினாள் மீனா.

இராமன் திடுக்கிட்டு நின்ற அந்தக் கணம் அக்கம் பக்கம் எல்லோரும் கதறல் கேட்டு வீட்டு வாசலுக்கு வந்து விட்டனர்..

"கல்யாணத்துக்கு இடம் பார்த்துட்டு இருக்கிற பொண்ண கடத்தியிருக்காங்களே!"

"இனிமே எப்படிக் கல்யாணம் காட்சின்னு நடக்கும்?"

ஆளாளுக்கு பேசிக் கொண்டு போனார்கள்.

தொழிலதிபர் அதட்டலில் பயந்து காவல்துறையினர் தீவிரமாய்த் தேடி இருவரையும் மீட்டுவிட்டனர்.

இராமனுக்கும் மீனாவிற்கும் போன உயிர் திரும்பி வந்தது. தொழிலதிபர் மகள் கல்லூரி மாணவி. அவளைக் கடத்தும் போது கல்லூரிப் பேராசிரியையான வசுமதி அருகில் நிற்கவும் இருவரையும் சேர்த்துக் கடத்தி விட்டிருக்கின்றனர். எந்தவித சேதமுமின்றி இருவரும் காவல்துறையின் உடனடித் தேடலில் மீட்கப்பட்டனர்.

அன்று..

வசுமதியைப் பெண் பார்க்க வந்தவர்கள் விலாசம் தேடிவருகையில் அக்கம் பக்கத்து வீட்டு மனிதர்களால் வசுமதி கடத்தப்பட்ட விசயமும் அவர்கள் காதிற்கு வந்துவிட்டன.

மாப்பிள்ளை பையனின்தாயார் சற்று தயக்கமுடன் கணவரைப் பார்த்து "என்னங்க பிக்னிக் போன இடத்துல கடத்தப்பட்டு மீண்ட பெண்ணாமே. சந்தேகப்படுகிற மாதிரி எதுவும் நடந்திருக்க கூடுமோ?" என்று கேட்டாள்.

"எதற்கு தீர விசாரிக்காமல் யாரையும் எதுவும் சொல்லக்கூடாது வாய மூடிட்டு வா" என்றார் பையனின் அப்பா கைலாசம். ஆனால் அவர் மனமும் சலனம் அடைந்து தான் போனது

இராஜேந்திரன் அமெரிக்காவில் மேற்படிப்பு படித்த அங்கேயே பணிபுரிகிற இளைஞன் ஊரார் பேச்சில் நம்பிக்கை ஏற்படாததால் வசுமதியை நேரில் பார்க்கப் போகும் உற்சாகம்

குறையாமல் அவர்களை தொடர்ந்தான்

"வாங்க வாங்க என்று மீனாவும் ராமனும் வரவேற்றனர்.

சோபாவில் அமர்ந்ததும் ராஜேந்திரனின் அப்பா கைலாசத்தின் கண்களில் ஹால் சுவரில் மாட்டி இருந்த அந்த புகைப்படம் அவரை உடனே யோசிக்க வைத்தது

"ஆமாம்... அந்த படத்தில் இருக்கிற பெரியவர் யாருங்க?" என்று ராமனிடம் கேட்டார்.

இராமன் சட்டென "என் அப்பா! பெயர் நடராஜன் பள்ளி ஆசிரியர்" என்றான்.

"திருவாரூர் பக்கத்துல அந்த திரு மேலூர் கிராமத்து வாத்தியார் தானே?"

"ஆமாங்க"

"அவர்கிட்ட தான் நான் படிச்சேன் அப்போ வசுமதி, நடராஜன் சாரோட பேத்தியா! பலே.. சார் இப்போ எங்கேஇருக்கார் ?

"இப்போது... இப்போது..." என்று ஆரம்பித்த ராமன் "எங்களுடன் தான் இருக்கிறார்... அம்மாவும் அப்பாவும் தீர்த்த யாத்திரை என்று வடக்கே போயிருக்கிறார்கள்"

என்றான் சற்று தடுமாறும் குரலில்.

வசுமதி வந்து நின்றாள். பெண்பார்த்தல் நிகழ்ச்சி முடிந்தது.

"நடராஜன் வாத்யார் நேர்மையின் மறு உருவம் பாருங்க இன்னைக்கும் நான் நேர்மை நாணயமா மன உறுதியோடு மற்றவர்களை மதிக்கும் பண்புடன் இருக்கிறேன் என்றால் அதற்கு வித்திட்ட ஆசான் உங்க அப்பா தான். அவர் குடும்பத்தில சம்பந்தம் வைத்துக் கொள்வதில் எனக்கு மகிழ்ச்சி, பெருமையும் கூட! நீங்கள் ஆலோசித்து முகூர்த்தத்துக்கு நாள் குறித்து சொல்லி அனுப்புங்க மத்தபடி சீர் செனத்தி எதுவும் செய்யக்கூடாது எளிமையான திருமணம் அதுதான் என் பையன் ராஜேந்திரனோட விருப்பமும்"என்றார் கைலாசம்.

"ஆமாம் அப்பா சொல்லுக்கு மறு பேச்சு கிடையாது. நன்றி, வருகிறோம்" என்று ராஜேந்திரன் எழுந்து கொண்டான்.

வாசலுக்கு வந்ததும் ராஜேந்திரனின் அம்மா ஏதோ பேச வாய் எடுக்கும் முன் ," தெரியும் நீ என்ன கேட்கப் போகிறாய் என்று.இது நடராஜன் வாத்தியார் வீட்டு குடும்பமடி. எந்தவித சந்தேகமும் தயக்கமும் இல்லாமல் சம்பந்தம் வைத்துக் கொள்ளலாம். இங்கே எந்தவிதத் தவறும் நுழையவே வாய்ப்பில்லை" என்று அழுத்தம் திருத்தமுமாய் கூறி முடித்தார்

அவர்களைப் பின்தொடர்ந்து வெளியே வந்த ராமனுக்கும் மீனாவுக்கும்

இதைக் கேட்டு கண் பணித்தது. வேர் உறுதியாக இருந்திருந்தால் மரத்தை அசைக்க முடியாதுதான்.

இராமன் ஒரு முடிவுடன் ஸ்கூட்டரை ஊட்ட துவங்கினான், அடுத்த அரை மணியில் அவனது ஸ்கூட்டர் அந்த முதியோர் இல்லத்து வாசலில் போய் நின்றது அப்படி நிற்கப் போவதில் இதுவே கடைசி முறை என்பது ஸ்கூட்டருக்குத் தெரியாதுதான்.

--

மைதிலி நாராயணன் (ஷைலஜா),
A208 அநன்யாஸ் நானா நானி குடியிருப்பு,
கஸ்தூரி நாய்க்கன்பாளையம்.

---

# பராபரம்

அம்பரத்தில் பம்பரமாக
சுழல்கிறது பூமி
அதைச் சுழற்றியவன்
யாரென்று காமி

சுழற்றியவன் சாட்டையைக் கூட
விட்டு விட்டுச் செல்லவில்லை

பால்யத்தின் மரப்பம்பரங்கள்
பல வண்ணச் சப்பரங்கள்

பம்பரம் சுற்றுவதிலும் கூட
ஆண் ஆட்டம்
பெண் ஆட்டம் என்று உண்டு

நிலம் நோக்கி
பம்பரத்தின்
ஆணி இருக்கும்படி வைத்து
சாட்டையை உருவி
சுழல விட்டால்
ஆண் ஆட்டம்

வான் நோக்கி
பம்பரத்தின்
ஆணி இருக்கும்படி வைத்து
சாட்டையை உருவி
சுழல விட்டால்
பெண் ஆட்டம்

'கோஸ்' எடுத்து
உள்ளங்கையில் எல்லாம்
பம்பரத்தைச் சுற்ற வைக்க
எனக்குத் தெரியாது

தெரிந்தவரை நிலத்தில்
சுமாராக சுற்ற வைத்தாலும்
பாட்டி நான் பம்பரம்
சுற்றும் போதெல்லாம் சொல்வாள்
'மன்னன் பம்பரம்
மணலிலும் ஆடும்' என்று.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்.

# குறுங்கவிதை பூக்கள்

தண்ணீர் பாய்ச்ச வேண்டும்
வெடிப்பு விடக்கூடும்
புதிய கட்டிடம்!

பருத்தி காடு
நன்றாகவே வெடித்து இருக்கிறது
களையெடுக்கும் கால்கள்!

முடி இழந்து நிற்கிறது
அனாதையாய் நடுக்காட்டில்
சோளக்காட்டு பொம்மை!
ஊருக்குள் நுழைந்ததும்
அவனை முதலில் வரவேற்கிறது
தெரு நாய்!

சிதறி கிடக்கிறது எங்கும்
மரத்தடிகளில்
நிழல்!
வரிசையாய் அடுக்கி
வைக்கப்பட்டிருக்கிறது
வெட்டப்பட்ட மரங்கள்
மரத்தடியில்!
நடவு செய்யப்பட்டிருக்கிறது
பெரிய மரங்கள்
மாடித்தோட்டத்தில்!

ஆட்டு மந்தை கூட்டம்
ஒன்றாய் கூடியிருக்கிறது
சாதிக்கட்சி கூட்டம்!
பொருத்து பொருத்து பார்த்தது
பொங்கி விட்டது
அடுப்பில் பால்!

—

மகிழை.சிவகார்த்தி

---

# பெண்ணே!

வலைத்தளங்களில் தொலைந்து விடாதே
- பெண்ணே
வஞ்சகர்களிடம் மயங்கி விடாதே!

சமயலறையில் அடைந்து விடாதே -
பெண்ணே
கனவுகளை கருக்கி விடாதே!

காதல் கொண்டு கவிபாடும் கண்ணே
கல்வியை கற்று காவியம் படைப்பாய்!

தீக்குச்சியால் தீபத்தை ஏற்றிடும்
பெண்ணே
தீயவன் தீண்டினால் தீக்கிரையாக்கிடு
கண்ணே!

குடும்பம் குழந்தைகள் போற்றிடும்
பெண்ணே
போர் கலைகளும் இங்கு தேவையடி
கண்னே!

காட்சிப் பொருளா பெண்கள் இங்கே
காட்சிப்படுத்த இணங்காதே கண்ணே!

அலங்காரம் மட்டும் அழகா - பெண்ணே
அதையும் தாண்டி ஏராளம் உலகில்

அற்ப சொற்ப சதவீதம் எதற்கு -

பெண்ணே
அகிலம் ஆளும் வல்லமை கொள்வாய்!

பூக்களில் மாலை தொடுத்திடும்
பெண்ணே
பூகம்பமாய் மாறவும் துணிவாய்
கண்ணே!

உடையில் மட்டும் புதுமை வீனே
புது எண்ணங்கள் தானே
புதுமைப்பெண்ணே!

வானை தாண்டி சென்றிடுவோம்!
வாழ்க்கை அதனை வாழ்ந்திடுவோம்!

புது சரித்திரம் அதனை
படைத்திடுவோம்!
சக பெண்களையும் உயர்த்திடுவோம்!

—

ரம்யா தங்கதுரை

---

# ஈரமென்ன முழுதாய்...

மூழ்கடித்த நீருக்குள்
மீன்
சிரித்தபடிதான்
நீந்திச் செல்கிறது...
சூரியனை
பிடிக்க சென்ற
பீனிக்சின் இறகெல்லாம்
வெற்றியின் வேகங்கள்...
ஒரு கல் எரிந்து
கலைத்துவிடும் மீனுக்குள்
சினைப்பையுடன்
விரைகிறது ஒரு மீன்
கல் சற்று கனம்தான்
விழும் வேகத்திலும்
எரிபவன் கோவத்திலும்....

## அயல்

பணியிடத்தின்
மொத்த மரங்களும் பூக்களை உதிர்த்து
செல்லும் பொழுது
ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி செல்கிறது
ஓர் முல்லை.
உடனே
யாரோ ஒருவரின் குரலைக் கேட்டது
பழைமையெல்லாம் கண்முன்
வந்து நிற்க
இமை உரசி நிகழ்காலம் உணர்த்துகிறது
தென்றல்...
மனம்போல்
யாருடைய வேண்டுதலும்
இல்லாத இடத்தில்
கல் கூட கடவுளாக
வைக்கப்படுவதில்லை

## சற்று புரட்டல்

அவன் அன்றே சொல்லிவிட்டு போன
ஏதோ ஒன்றைப்பிடித்துதான்
நாட்கள் நகர்கிறது

நிழல்களுக்கு வண்ணம் தீட்டி

வர்ணமயமானத கதையெல்லாம்
காலகாலமாக கண்கொட்டி மலர்கிறது

காடுகளை வளர்த்தவன் கையில்
அவனே அறியாமல்
கோடரி முளைத்துள்ளது

காதலுக்கு கடிதம் எழுதி
முற்றுப்புள்ளி வைக்காமல் சென்றதால்
தொடர்கதையானது காதல்...

சூரியன் கிழக்கு மேற்காம்
மனிதன் நல்லவன் கெட்டவனாம்
முன்னும் பின்னும் நகர்கிறது
பாலாய் போன நிழல்

வந்தவனும் போனவனும்
ஏதோ விட்டு சென்றான்
ஒருவன் கையில் தடி
ஒருவன் கையில் பிடி

சத்தியம் செய்தவன் அப்பாவி
சத்தியமாய் செய்தவன் விவரவாதி
இரண்டையும் கலந்து
உருவாகிறான் புதுமைவாதி..

## துளியாதுரம்

ஒரு குமிழ் நீரினை
திருப்திபடுத்தலாம்
ஒரு மீன்
குமிழ்களை விழுங்கியோர் பிறவிப்
பிறப்பிக்கலாம்...

மேல் பயணிக்கும் கப்பலின்
நிழல்கூட ஆழத்தினைக் கண்டு
சற்றும் அசைந்த்தில்லை

நிலவைப் பார்க்க எழும் திமிங்கலத்தின்
மொத்த அகலமாகிறது
நீரியல் படர்ந்த பூமியொன்று...

பயத்தோடு பயணிக்கும் கடலில்
படகின் துடுப்பில்
தைரிய ஈரங்கள்

காணாததை அறியாத இடத்தில்
காலில் உரசி நகர்கிறது
வேண்டிய நகர்வு நொடிகள்...

## முதுகோரம் சிறு ஈரம்

ஒரு சிறு வேரினை
படரவைத்துவிடும் சிறு செடிக்குத்தான்
எத்தனை பட்டா நிலங்கள்

விறகொடித்து எரியும் கலத்தில்
பசியுடன் கொஞ்சம்
நீரும் அனலாகத்தான் கொதிக்கிறது...

கொடுக்காத மகனுக்கு
தானாகவே எடுத்துக் கொள்ள
தூண்டுகிறது வாலிப வயது.....

சரி தவறென அறியும் இடத்தில்
மூன்று வண்ண விளக்கங்கள்
அவசியமாகிறது

யாராலும் விளக்க முடியாத
விடயங்களுக்கு வயது கண்டிப்பாக ஒரு

காரணமாகிவிடாது.....

ஆறாம் விரலாய் எழுந்த
ஓர் புது வகைமைக்கு சமுக சூழல்
சிறு கதவிடைவெளியாகிறது....

## குவியத்தொடங்கிய வெளிச்சங்கள்

ஒரு வணக்கத்தோடு வாழ்வியலை
உற்றுநோக்கி
புதைத்துப் பார்ப்பதில்
எத்தனை லாவகம் இந்த நாளிகைக்கு....

கரங்கள் இணையும் பொருட்டுதான்
காதலும்
மோதலும்
சலாமிட்டு இதயம் இணைய
மரர்பகங்கள் கட்டுப்பிடி
வைத்தியமிணைகின்றன...

வரலாறுகளில் கையெடுத்து
கும்பிடுதல் என்பது
மன்னிப்பின் இரண்டாம்
குழந்தையாகத்தான் பாவிக்கப்பட்டது...

கூந்தல் நெடுக
பின்னே முடியப்பட்டு
முற்றுபெறாமலே
இறுக அமைக்கப்பட்டுவிட்டன
பல இயந்திரப் பெண்களாய் மாறிய
இந்திரனின் சபைப் பெண்கள்.....

ஒரு விளக்கின் வெளிச்சத்தில்
பயணிக்கும் விட்டில்களின்
வசிப்பிடத்தில்
அடர் இருள் விழத்தான் செய்கிறது....

பற்றியும் பற்றாமல்
முழுமைபெற்ற இருளில்
ஒரேயொரு விட்டிலின்
சிறு குருதி மாறி கும்மிருட்டை
கிழித்த வெளிச்சம்.....

—

கவிஞர். சே கார்கவி,
நாகப்பட்டினம்.
*(Er. Prof. சே கார்த்திகேயன். ME)*
*SWD. Chennai*



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.